தொழிலாளர் வேலைநிறுத்தத்தால் பிரான்ஸ் இருளில் மூழ்கியது

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப் | மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49 மலர் 11
போன்: 389 National Tamil Daily இதழ்: 30
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் மாசி 29 ஜூ றஜ்: 22 புதன்கிழமை (12-3-69)

பெரும்பான்மையினருக்கு தமிழர்பிரச்னையில் பொறுப்பு

இதை உணரச் செய்வது எனது முதல் கடமை

தமிழரசு கட்சியின் புதியதலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

'தமிழ் பேசும் மக்களை விழிப்புணர்ச்சியுள்ளவர்களாகவும் தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் ஆக்குதலும் இந்த நாட்டில் தமிழர் சுயமரியாதை உள்ளவர்களாக வாழ்வதற்கு உழைக்கவும், தியாகம் செய்யவும் அவர்களைத் தயாரக்குவதுமே தலைவராகத் தெரியப்பட்டிருக்கும் எனது குறிக்கோள்களாகும்'

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் பட்டிருப்பு ஆட்சிமன்ற உறுப்பினரான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைவர் பதவியை ஏற்ற பின்னர் நமது நிருபரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்றுநடைபெற்றபொதுச் சபைக் கூட்டத்தில் முதலாவதாக தலைவர் பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

முதலமைச்சர் ராஜினாமா

புதுடில்லி, மார்ச் 11

மத்திய பிரதேஷ் புதிய முதலமைச்சர் திரு. கோவிந்த் நாராயண்சிங் தமது பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

பிரதமருக்கு எதிராக அனுரா போட்டி

கொழும்பு, செவ்

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயகாவின் மகன் அனுரா பண்டாரநாயகாவை அடுத்த பொதுத் தேர்தலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய

தேசிய கீதத்தை தமிழ்நாடு அவமதிக்காது

முதல் அமைச்சர் வாக்குறுதி

சென்னை, மார்ச் 11

தேசிய கீதத்தை அவமதிக்கும் நோக்கம் தமிழ்நாடு அரசுக்குகிடையாது என்று முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று தமிழ்நாடு கீழ்சட்ட சபையில் உறுதி கூறினார்.

மதுரை கல்லூரி யொன்றில் நடைபெற்ற கடந்த ஒரு வைபவத்தில் தேசிய கீதம் பாடப்பட்டபோது சிலர் கோஷம் போட்டது குறித்து ஓர் அங்கத்தவர் விவாதம் நடத்தக்கோரி கொண்டுவந்த தீர்மானத்தின்மீது திரு. கருணாநிதி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

தேசியகீதம் பாடப்பட்டபோது சிலர் கோஷமிட்டதாகவும் அதன்பின் சங்கே முழங்கு என்றபாடல் பாடப்பட்டதாகவும் கல்வி அமைச்சர் சபையில் விளக்கினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ... வும்கூடாது என்றும் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் இடையில் பேசுகையில், தேசிய கீதம் பாடப்பட்டபோது கோஷம் போட்டதால் அந்நிலையை யைச்சமாளிக்கவே சங்கே முழங்கு பாடல் பாடப்படுவதற்கு கல்வி அமைச்சர் அனுமதித்திருக்கக்கூடும் என்றும் தாம் கருதுவதாகவும், சங்கே முழங்கு என்ற பாடல் பாடப்படுவதற்கு கல்வி அமைச்சர் அனுமதித்திருக்கக்கூடும் என்று தாம் கருதுவதாகவும், சங்கேமுழங்கு என்ற பாடல்பாடப்படவேண்டுமானால் தேசியகீதத்துக்குமுன்பே பாடுவதாக வைத்துக்கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார். எப்படியானாலும் தேசியகீதத்தை அவமதிக்கும் எண்ணம்இந்த அரசுக்கு இல்லை. எனவே தேசியகீதம் பற்றி விவாதம் ...

பொருட்களுக்கு விலைநிர்ணயம்

பம்பலப்பிட்டி, செவ்.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விலைகள் நேர்மையானமுறையில் நிர்ணயிக்கப்படாது காணப்படுவதால் இவைகளுக்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அங்கீகாரம் பெற்றனவும், பதிவு செய்யப்பட்டனவுமான சகல கைத்தொழில் ஸ்தாபனங்களினதும் பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கவும், கட்டுப்படுத்தவும் கைத்தொழில் அமைச்சு வெகுவிரைவில் நடவடிக்கை யெடுக்குமென தெரியவருகிறது. இதுவிடயமாக கைத்தொழில் அபிவிருத்தி அதிபர் பதிவுபெற்ற அங்கீகாரம்பெற்ற கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கு வர்த்தமானி மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

பாரிஸ், மார்ச் 11

பிரான்சில் இன்று தொழிலாளர்கள் நடாத்திய 24 மணிநேர பொது வேலைநிறுத்தத்தால்போக்குவரத்து, மின்சாரம் பெருமளவு பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக பிரான்ஸ் பொருளாதாரம் பெரும் சோதனைக்குள்ளாகிதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக பல பாடசாலைகள் மூடப்பட்டன பிரான்சின் பல பகுதிகள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன.

லட்சக் கணக்கான சீனர்கள் ஆர்ப்பாட்டம்

பீகிங், மார்ச் 11

பீகிங்கில் இன்று ரஷ்யத் தூதராலயத்தின் முன்னால் லட்சக் கணக்கான சீனர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தினார்கள்

சென்ற வெள்ளிக்கிழமை ரஷ்யாவிலுள்ள சீனத் தூதரகம் தாக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இந்த தூதராலயத்துக்குச் செல்லும் வழியை ஆர்ப்பாட்டக்காரர்கள் மறித்துக் கொண்டார்கள்

ரஷ்ய - சீன எல்லையில் தோன்றியுள்ள நெருக்கடியைத் தொடர்ந்தே இவ்வித ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் ரஷ்ய எதிர்ப்புக் கோஷங்களைக் கோஷித்தனர்

பதில் மாஜிஸ்திரேட்

குடும்பசிட்டி, செவ்.

மயிலாகம் நீதிமன்றத்தில் இன்று வரை திரு. ஜீ. வி. பாலசிங்கம் பதில் மாஜிஸ்திரேட்டாக கடமையாற்றுவார்.

ஆசிய புள்ளிவிபர நிறுவனம்

பம்பலப்பிட்டி, செவ்.

ஆசிய புள்ளிவிபர நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்கு முன்வந்துள்ள ஏழு நாடுகளில் ஒன்றாக இலங்கையும் விளங்குகிறது. அமெரிக்கஉதவியுடன் ஸ்தாபிக்கப்படும் இந்த நிறுவனம் ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் நிறுவப்படும் இந்தியா, இந்தோனேசியா, ஈரான், ஜப்பான், கொறியா, லாவோஸ், மலேசியா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்னாம் குடியரசு ஐக்கிய இராச்சியம் கொங்கொங் ஆகிய நாடுகளும் இலங்கையோடு இப் புள்ளிவிபர ஸ்தாபனத்தை நிறுவுவதில் பங்கு பற்றுகின்றன.

பாகிஸ்தான்

வட்டமேசை மகாநாடு

ராவல்பிண்டி, மார்ச். 10

பதினொரு நாட்களுக்குப் பிறகு மீண்டும் இன்று கூடியபாகிஸ்தான் அரசாங்க-எதிர்க்கட்சித் தலைவர்கள் வட்டமேசை மகாநாடு 2 மணிநேரச் சந்திப்பின்பின் நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது. ஜனநாயகச் செயல்கமிட்டி இந்த மகா

தமிழ்மொழி பாவனை

சுற்றுநிருபம் கிளப்பிய சூடான விவாதம்

யாழ்ப்பாணம், புதன்

வடக்கு, கிழக்கில் தமிழ் மொழி பாவனை பற்றி அரசாங்கத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் பற்றிநேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை கூட்டத்தில் பலரும் அதிருப்தி தெரிவித்தனர்.

வடக்கு கிழக்கில் சிங்கள மொழியுடன், தமிழிலும், தொடர்பு வைக்கலாம் என வெளியில் பட்டதை 'தமிழில் செய்ய வேண்டும்' என சேர்க்கப்படாததுஏன்என்று ஏனைய அங்கத்தவர்களும் கூட்டத்தில் கேள்விக் கணைகளைத் தொடுத்துக் கொண்டிருந்தனர்.

இன்றைய நிலையில் இதில் செய்யக் கூடிய திருத்தங்கள் பற்றி கட்சிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் உறுப்பினருக்கு நீண்ட விளக்கம் கொடுத்தார் சில அரசாங்க ஊழியர்களுக்கு கஷ்டம் கொடுக்கும் வகையில் இந்தச் சுற்று நிருபம் வெளிவந்துள்ளதாகவும் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர். இ. எம். வி. நாகநாதன், செ. இராசதுரை, வி. அழகக்கோன் ஆகியோர் தவிர செனட்டர் எம். திருச்செல்வம், எம். எக்ஸ். மார்ட்டின் உட்பட பலரும் இங்கு சமுகம் கொடுத்திருந்தனர்.

தமிழரசுக்கட்சி மகாநாடு, தொகுதிகள் தோறும் கிளைகள் நிறுவுவது ஆகியன பற்றியும் இங்கு ஆலோசனை செய்யப்பட்டது.

(சுா. நி)

இந்தி திணிப்பு சுற்றுநிருபம்வாபஸ்

புதுடில்லி, மார்ச் 11.

நமுனைக்களும் ஐந்து ஆண்டு

தின்மீது திரு. கருணாநிதி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

தேசியகீதம் பாடப்பட்ட போது சிலர் கோஷமிட்டதாகவும் அதன்பின் சங்கே முழங்கு என்றபாடல் பாடப்பட்டதாகவும் கல்வி அமைச்சர் சபையில் விளக்கினார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் பேசுகையில், தேசியகீதம் பாடப்பட்டபோது கோஷமெழுப்பப்பட்டிருக்கக்கூடாது என்றும்அதற்குப்பின்சங்கே முழங்கு என்ற பாடல் பாடப்படுவதற்கு அனுமதித்திருக்க வேண்டுமானால் தேசியகீதத்துக்குமுன்பே பாடுவதாக வைத்துக்கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார். எப்படியானாலும் தேசியகீதத்தை அவமதிக்கும் எண்ணம்இந்த அரசுக்கு இல்லை. எனவே தேசியகீதம் பற்றி விவாதம் நடத்தி அதற்கு அவமதிப்பு ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இதன்பேரில் விவாதம் நடத்துவதை சபாநாயகர் மறுதலித்தார்.

ஆர். ஜி. க்கும், கம்பகா எம். பிக்கும் பொன்னம்பலம் பதில்

அல்லைப்பிட்டி, செவ்.

உலகில் வாழ்கின்ற தமிழ் இனத்திற்கு எங்கோ ஒரு ஆட்சி உரிமை வேண்டும். தமிழ்நாடு என்று தமிழினும் பெருமை கொள்ளக் கூடிய ஒரு நாடு இருக்க வேண்டும், என்ற உண்மையை உணர்ந்தவர் அதை அடைய முயற்சித்தவர் அறிஞர் அண்ணா. உலகில் வாழ்கின்ற தமிழினத்திற்கு ஒரு நாடு இருக்க வேண்டும் என்ற உண்மையை இன்று தமிழினம் நன்கு உணர்கின்றது. தனிநாட்டுக்கோரிக்கையை அண்ணா கைவிட்டுவிட்டார். என்று இங்குள்ள யூ. என். பி. அரசியல் வாதிகள் சிலர் கூறிவருகிறார்கள். ஆனால் அண்ணா தன் தனிநாட்டு இலட்சியத்தை எப்பொழுதாவது கைவிட்டது கிடையாது. பிரிவினைக் கோரிக்கையைத் தடை செய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டபோது சட்டத்தை ஏமாற்றவே அண்ணா பிரிவினை என்ற சொல்லைக் கைவிட்டதாக கூறினாரேதவிர மனதார அந்த இலட்சியத்தை அவர் கைவிடவுமில்லை, அந்த இலட்சியத்துக்காக வகுத்த பாதைகளை விலகி அவர் நடக்கவுமில்லை.

இவ்வாறு நேற்று மாலை நெடுந்தீவு குருநகர் மைதானத்தில் அண்ணா கலைமன்றத்தினரால் நடத்தப்பட்ட அண்ணா இரங்கலில் ஊட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், அண்ணா ஒரு சிறந்த ஜனநாயகவாதி, இன்று அண்ணாவைப் போற்றுகின்ற அரசியல் வாதிகள் அவரது ஜனநாயகக் கொள்கைகளைச் சற்று அவதானித்து பின்செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில், தூயதமிழ் வளர்ச்சியை ஏற்படுத்தியவர். இலட்சியம் தவறாதவர், அண்ணாவைப் பற்றிப் பேசும் எம்மவர்கள் அவரது பாதையில் செல்லும் யோக்கியதாம்சைஉள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்று அண்ணாவைப் பற்றிப் பேசினால் ஆர். ஜி. போன்றவர்களுக்கு கொதிப்பேற்படுகின்றது. தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு, அண்ணாவைப் பற்றியும் அவரது இயக்கத்தைப் பற்றியும், நன்கு தெரிந்தும்கூட அவர்களது இயக்கத்தால் ஏதோ இலங்கைக்கு ஆபத்து இருக்கிறது என்று தாங்கள் பதவிக்கு வருவதற்கு தென்னிலங்கை மக்களைப் பார்த்து வகுப்புவாதக் குரல் எழுப்புகின்றனர். இது அநாகரீகமான அரசியல் பிற்போக்குவாதமாகும். கம்பகா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா தி. மு. காவையும் அண்ணாவையும் இலங்கை வாழ் தமிழர்களையும், கேவலமாகப் பேசி அரசியல் வளர்க்க முற்படுகின்றார். அவருக்கு இக் கூட்டத்தில் நின்று நான் சவால் விடுகின்றேன், இந்த நாட்டில் உள்ள சிங்கள மக்களுக்கு இலங்கையின் தேசீய உணர்வும், எமது நாட்டுக்கு விசுவாசமாகநடக்க வேண்டுமென்ற எண்ணமும் எப்படித் தீவிரமாக இருக்கின்றதோ அதைவிடத் தீவிரமாக இந்த நாட்டுப் பற்று தமிழர்களுக்கு உண்டு. ஆனால் தமிழரின் உரிமைகள் பறிக்கப்படும்போது நாம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்.

இக் கூட்டத்திற்கு சங்கீத பூஷணம், வே. சுந்தரலிங்கம் தலைமை தாங்கினார்.

திரு. நவரத்தினத்துக்கு அண்ணா கலைமன்ற செயலாளர் செல்வன் வி. லோக

நாதனால் அண்ணா உருவப் படம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

ராஜினாமா

புதுடில்லி, மார்ச் 11

மத்திய பிரதேஷ் புதிய முதலமைச்சர் திரு கோவிந்த நாராயணசிங் தமது பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தலின் பின் திரு கோவிந்த நாராயணசிங் முதலமைச்சராக வந்தார். அவருடைய ராஜினாமாவைமத்திய பிரதேஷ் கவர்ணர்ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிகின்றன.

எதிர்க்க அனுரா போட்டி

கொழும்பு, செவ்

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயகாவின் மகன் அனுரா பண்டாரநாயகாவைஅடுத்த பொதுத் தேர்தலில் பிரதமா திரு. டட்லி சேனநாயகாவுக்கு எதிராக டெடிகமைத் தொகுதியில் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி அபேட்சகராக நிறுத்துவதற்கு எதிர்க் கட்சிக் கூட்டணியினர் முயற்சி செய்வதாகக் கூறப்படுகிறது.

நாவலர் சிலைக்கு நிதி திரள்கிறது அறநிலையமாக அங்கீகாரம்

கொழும்பு, செவ்

''செந்தமிழையும் சைவத்தையும் வாழவைத்து, சென்ற தூற்றாண்டின் மாபெரும் தேசபக்தராகவிளங்கிய, நல்லைநகர் நாவலருக்கு திருஉருவச்சிலை நிறுவுவதற்காக, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தொடங்கியுள்ள திருப்பணிக்கு தினமும் ஆதரவு திரண்டுவருகின்றது. அன்னாரின் உருவச்சிலையுடன் மணிமண்டபம், நூலகம், முதலியவற்றையும் கட்டியெழுப்புவதற்கு நாவலர் சபை திட்டங்கள் வகுத்துவிட்டது. சென்ற வாரம் நாவலர் சபைக்கு மேலும் சில பெரியார்கள் நன்கொடைகள் வழங்கியிருக்கின்றனர்.

கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகப் பிரமுகர்களான சென்ற். அந்தனீஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் அதிபர் திரு. சாமுவல்ஞானம், 'கமலம்ஸ்' ஸ்தாபன அதிபர் திரு. பொ. சிவரத்தினம், ஏ.எஸ்.எஸ். சங்கரப்பிள்ளை அன் கம்பனி அதிபர் திரு. எஸ். சோமசுந்தரம், நாதன் அன் கம்பனி அதிபர் திரு. எஸ்.எஸ். நாதன் ஆகியோர் தலைக்கு 1,000 ரூபாவை உபகரித்துள்ளனர். மற்றும் யாழ்டன் ஸ்டோர்ஸ் அதிபர் க. சி. நடராசா ரூபா 477 -யும், கொலோனியல் மோட்டார் ஸ்தாபனம்ரூபா 50 -யும் அளித்துள்ளனர்.

நன்கொடை விபரம்:

திரு. ஏ.வை. சாமுவல் ஞானம் ரூபா1,000-00சதம் திரு. பொ. சிவரத்தினம் ரூபா 1,000-80சதம், திரு. எஸ். சோமசுந்தரம் ரூபா 1,000-00சதம், நாதன் அன் கம்பனி ரூபா1,000,00சதம் திரு.க.சி. நடராசா ரூபா 477-00சதம்' கொலோனியல் மோட்டோர்ஸ் ரூபா 50-00 சதம்

மேலும் நிதிதேவை:

சபை திட்டமிட்டுள்ள பணிகள்அனைத்தையும்நிறைவேற்றுவதற்கு மேலும்அதிக நிதி தேவையெனவும், சிலவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அதற்கு பயன்படக்கூடியதாகபொது மக்கள், குறிப்பாக வெளியூரன்பர்கள் தங்கள் நன்கொடைகளை ''கூட்டுப் பொருளாளர்கள்- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, 59, நொறிஸ்கனல்வீதி, கொழும்பு-10'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படியும் நாவலர் சபை கோரியுள்ளது.

தர்மப்பணி

ஆறுமுகநாவலர் சபையின் கல்விப்பணி நிதிக்கு நன்கொடை வழங்குவோர்க்கு அத்தொகைக்கு வருமானவரிச் சலுகை கிடைக்கக் கூடியதாக சபை அங்கீகரிக்கப்பட்ட தர்மஸ்தாபனங்களில் ஒன்றாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டது'' என்று சபையினர் அறிவித்துள்ளனர்.

அம்புலன்ஸ் இல்லாததால் அவலம்

காங்கேசன்துறை, புதன்

பெண் ஒருவருக்கு இரத்தம் பெடுக்கெடுத்தபோது உடன் சிகிச்சையளிப்பதற்கு காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் 'அம்புலன்ஸ்' இல்லாததால் காங்கேசன்துறை சிமெந்து கூட்டுஸ்தாபனத்தின் அம்புலன்ஸே உதவ முன்வந்ததாம்.

இங்கு அம்புலன்ஸ் இல்லாததால் பலதடவைகள் ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகள் பெரும் அவதிக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

பஸ் சாரதி பிணையில்

யாழ்ப்பாணம், புதன்

கேண்டாவில் பஸ் டிப்போவுக்குள்ளே 'மெக்கானிக்' ஒருவரை மோதி மரணம் விளைவித்ததாகக் கூறப்படும் பஸ்ஸின் சாரதியான கிருஷ்ணராஜாவை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த தற்காலிகமாஜிஸ்டிரேட் திரு. எஸ். கனகரத்தினம், சாரதியை இன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (செய்தி 2-ம் பக்கம்)

பதினொரு நாட்களுக்குப் பிறகு மீண்டும் இன்று கூடியபாகிஸ்தான் அரசாங்க-எதிர்க்கட்சித் தலைவர்கள் வட்டமேசை மகாநாடு 2 மணிநேரச் சந்திப்பின் பின் நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது. ஜனநாயகச் செயல்கமிட்டி இந்த மகாநாட்டில் கலந்துகொண்டது. அரசாங்க தரப்புக்கு பாக். அதிபர் ஜெனரல் அயூப்கான் தலைமை தாங்கினார்.

விற்பனை வரிச்சலுகை பெறுவர்

சென்னை, மார்ச் 11.

இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியிருக்கும் அகதிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு இரண்டு ஆண்டு காலத்துக்கு விற்பனை அறவிடுவதிலிருந்து விலக்கு அளிக்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்திருக்கிறது. இது பற்றி அதிகாரிகள்ஆராய்ந்து வருகிறார்கள். இத் தகவல்களை தமிழக நிதியமைச்சர் திரு. மதியழகன் தமிழ்நாடு சட்டசபையில் வெளியிடப்பட்டார்.

இந்தி திணிப்பு சுற்றுநிருபம்வாபஸ்

புதுடில்லி, மார்ச் 11.

தாம் கல்வி இலாகாபொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு ஹிந்தியை படிப்படியாக உபயோகிப்பது சம்பந்தமாக அந்த இலாகா வெளியிட்டிருந்த சுற்றறிக்கையை வாபஸ் பெறும்படி யூனியன் கல்வி மந்திரி டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் உத்தரவிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தேசிய உபகாரச் சம்பளங்கள் சம்பந்தமான எல்லா கடிதப் போக்குவரத்தும், நமூனாக்களும் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஹிந்தியிலேயே இருக்க வேண்டும் என்று அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தது. வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் ஹிந்தியிலேயேதயாரிக்கப்பட வேண்டும். 80 சத விகிதத்துக்கு மேற்பட்ட ஊழியர்களுக்குஹிந்தி தெரிந்திருந்தால் அந்தப் பிரிவுகளில் எல்லாம் எல்லா அலுவலும் ஹிந்தியிலேயே நடத்தப்பட வேண்டுமென்றும் அதில் கூறப்பட்டிருந்தது.

மலையாளி எதிர்ப்புபற்றிய

கருணாநிதி கொள்கைக்கு மத்திய மந்திரி வரவேற்பு

கோவை மார்ச். 11

நாட்டில் மலையாளி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீதுஉறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. கருணாநிதி சட்டசபையில் துணிகரமாக கூறியிருப்பதை வரவேற்பதாக மத்திய சட்ட மந்திரி திரு. பி. கோவிந்தமேனன் கோவையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இந்தசமிக்ஞையைத் தாம் பெரிதும் பாராட்டுவதாகவும், நாட்டிலுள்ள இதர அரசுகளும் பிறபகுதி மக்கள் சம்பந்தமாக இதே மனப்பான்மையை காட்டுமென்று நம்புவதாகவும் திரு. கோவிந்த மேனன் கூறினார்.

சிவசேனை போன்ற இயக்கங்கள் நாட்டுக்கு அபாயகரமானவை யென்றும், மத்திய அரசிலுள்ள மகாராஷ்டிர மந்திரிகள் குறிப்பாக திரு சவாண்-இத்தகைய இயக்கத்தை ஆதரிப்பதாக நினைப்பது தவறு என்றும் திரு. கோவிந்தமேனன் கூறினார். திரு. சவாண் பகிரங்கமாகவே இந்த இயக்கத்தைக் கண்டித்திருக்கிறார் என்றார்.

பம்பாய், கல்கத்தா' சென்னை ஆகியவை நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஒருங்கு வாழும் நகரங்கள் என்று பெயர் பெற்றவை. சிவசேனை போன்ற ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளால் இத்தகைய நகரங்களின் பெருமை குறைந்து விடும். இதை மத்திய அரசு அனுமதிக்காது என்றும் திரு. கோவிந்த மேனன் கூறினார்.

உள்ளூராட்சி சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்

யூனியன் கோரிக்கைக்கு அமைச்சர் சம்மதம்

யாழ்ப்பாணம், புதன்

''இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதிவரை உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும், உடனடியாக உள்ளூராட்சிச் சேவையில் உள்ளடக்குதல் வேண்டும்'' என உள்ளூராட்சி சேவையில் அல்லாத உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் சங்க யாழ். மாவட்டக்கிளை விடுத்த வேண்டுகோளை உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா ஏற்றுக்கொண்டதோடு, இதனை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு தனது நிரந்தரக்காரியதரிசிக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சங்கத் தூதுகோஷ்டியொன்று இம் மாதம் 9-ம் திகதி தலைவர் திரு. சி. ஆறுமுகம், காரியதரிசி தவராசசிங்கம், உப தலைவர் எஸ். ஜெகதீசன் ஆகியோர் தலைமையில் அமைச்சரைப்பேட்டி கண்டது.

சகல உத்தியோகத்தர்களையும் உள்ளூராட்சி சேவையில் பதியும் படி உள்ளூராட்சி அமைச்சர் உள்ளூராட்சி அதிகார சபைக்கு இட்டகட்டளை இன்னமும் அமுலுக்கு வரவில்லையாதலால் 31-4-69க்கு முன் இந்தப் பிரிவு நடக்கவேண்டுமெனவும், மேற்படி ஊழியர்களை உள்ளூராட்சி சேவையில் பதிவு செய்யும் போது ஆரம்ப நியமன காலத்தில் உள்ள சேவையும் விகிதசம்பள உயர்வும் வழங்கப்பட வேண்டும் எனவும் தூதுக்குழுவினர் அமைச்சரிடம் வேண்டினர்.

சகல உள்ளூராட்சி மன்றங்களும் கடமையாற்றும் ஊழியர்களும் நாளை கிரிமலை நகுலேஸ்வர சனசமூக நிலைய மண்டபத்தில் கூடி இவைபற்றி ஆலோசிவிடுக்கின்றனர். (கா. நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

பரியாரி கமம் 6 ஏக்கர் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை-சிதம்பரப்பிள்ளையின் ஆதனம் தெற்கு ரோட்டு மேற்கும் வடக்கும் குளம் மாந்தை தெற்கு மாந்தை டிவிஷன், மன்னார் டிஸ்திறிக், வடமாகாணம். நல்ல விளைச்சலான காணி உடன் விற்க விரும்புகிறேன். நேரே தொடர்பு கொள்ளவும். S. S. பொன்னையா, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை. 735

படம்:

அறிஞர் அண்ணாவின் பல ரக உருவப்படங்கள் விற்பனைக்குண்டு. பிரதி விலை ரூ. 2/50. தொடர்பு கொள்க. எம்.ஜி. ஆர். மன்றம், கைதடி. 753

தேவை

மணமகள்

தனியாக வாழும் சுகதேகியான 55 வயதுடைய பென்ஷனருக்கு வாழ்க்கைத் துணையாக 40வயதுக்கு மேற்பட்ட தெய்வபத்தியும் அடக்கமும் தேகாரோக்கியமும் உடைய சைவவேளாளப் பெண் தேவை. தமிழறிவு இருத்தல் விரும்பத்தக்கது. விளம்பர இலக்கம். 750, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 750

பூந்தோட்ட வேலையில் அனுபவமுள்ள ஆரோக்கியமான தோட்டக்காரன் தேவை. நேரில் மனுச் செய்க. அரஸ்கோ, நல்லூர், யாழ்ப்பாணம். 755

கல்வி

வகுப்புக்கள்:

மத்திய எழுதுவினைஞர், தபால், தந்தியாளர், சிறுப்பர் பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் அனுபவமுள்ள பட்டதாரிகளால் கற்பிக்கப்படுகின்றன. இருபாலாருக்கும் விடுதி வசதியுண்டு. உடனே சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 543

வாடகைக்கு

வீடு:

நல்லூர் கோயில்களுக்கருகாமையில் சகல வசதிகளுடன் 5 அறை வீடு (181, கோவில் வீதி) வாடகைக்குண்டு. விபரங்களுக்கு 52 A, சிவன்கோவில் ரோட், திருநெல்வேலி. 544

அடிகாயங்களுடன் அனுமதி

யாழ்ப்பாணம், புதன்

அடிகாயங்களுடனும், கத்திக்குத்துக்காயங்களுடன் 35 வயதுடைய ஒருவர் மிகப்படுமோசமான நிலையில் [illegible]

ஏல விற்பனை

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 236-ம் இலக்க கடையில் நகை அடைவு பிடிப்பவர் ப. க. பரமநாதன் அவர்களிடம் 1-1-67தொடக்கம் 31-12-67 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 25-3-69 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 1212

HOUSE AND PROPERTY FOR SALE

Vavuniya Town- Excellent Building site - Rectangular plot 8 lms. Bordering Kandy Road, adjoinig Maha Vidiyalaya and opposite to the present Bus Stand - Apply to N. Coomaraswamy Autos Ltd., Jaffna. 752

இன்றைய பலன்

(12-3-69)

மாசி மாதம், 29 உ

புதன்கிழமை

திதி-நவமி இரவு 9-28 மேல் தசமி.

நட்சத்திரம்-மூலம் பகல் 3-59 மேல் பூராடம்.

ராகுகாலம்-12-23 1-53

சுபநேரம் -4-53 6-23

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு செய்தொழில் விருத்தியும், சென்ற இடம் சிறப்பும், கன்னியர் வாழ்வில் களிப்பு மிகுதியும், வாகன விருத்தியும், வரவில்திருப்தியும், பகைவர் உறவும், வைத்தியர்களுக்; வளமன ஆண்டாகும்.

மேஷம்- உள்ளக் கிளர்ச்சி உறவாடும் நிலை.

ரிஷிபம்-உடல்நிலை மந்தம் உறவில் வெடிப்பு.

மிதுனம்-கன்னியர் உறவு மின்னிடும் காதல்.

கடகம்- துன்பத்தில் நிழல் தொழிலில் தடை.

சிம்மம்-பிதாவளிச்சுகம் பெரியோர் ஆதரவு.

கன்னி- அயராத உழைப்பு பயணச்சிந்தை.

துலாம் - சீரானவாழ்வு சிறுதனம் கிடைக்கும்.

விருச்சிகம் - வண்ணமயில் பிடிக்க வான்கோழி [illegible]

"சாரண இயக்கம் நல்ல சமுதாயத்தை உருவாக்கும்"

உடுவில், செவ்.

'சாரணர்கள் மூலம் மக்களிடையே பரஸ்பரம் நல்லெண்ணம், ஒற்றுமை மனப்பான்மை, தன்னம்பிக்கை, மன உறுதி, வீரம் ஆகியவற்றை வளர்த்து ஒரு நல்ல சமுதாயத்தை தோற்றுவிப்பதே சாரணர் இயக்கத்தின் தந்தையான பேடன் பவல் பிரபுவின் குறிக்கோளாக இருந்தது. இலங்கையில் குறிப்பாக நம்மத்தியில் சாரணர் இயக்கம் தீவிரமாக வளர்ச்சியடைவது மகிழ்ச்சிக்குரியதாகும்.''

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய சாரணர் இயக்கத்தின் 17-வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய யாழ்ப்பாண மாவட்ட சாரணர் இயக்க ஆணையாளர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் வேற்கண்டவாறு கூறினார்

சாரணர் இயக்க ஆசிரியர் திரு. ஞானசிகாமணி அன்னம்மா தலைமையில் தேநீர் விருந்துடன் விழா ஆரம்பமாகியது.

சாரணர்களால் பாடசாலை மைதானத்தில் அமைக்கப்பட்ட பாசறை பார்வைக்கு விடப்பட்டு அன்று மாலையில் ''பாசறைதீ'' வைபவம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளை சாரண ஆசிரியர் திரு. எஸ். ரி. ஆர்னல்ட் தலைமை தாங்கி நடத்தினார்.

சாரணர் இயக்கப் பாடல்கள், மாணவர்களின் ''அமெரிக்காவின் அண்டப்புளுகு'' ஆசிரியர்கள் திரு. டபிள்யூ. ஜி. அன்னப்பா, திரு. எம். கே. சின்னத்துரை ஆகியோரின் ஹாஸ்ய நாடகம் ஆகியவை முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன.

பொதுக் கூட்டத்தில் பாடசாலை அதிபர் திரு. வி. ஜி. சம்பந்தன், ஆசிரியர் திரு. தேவகடாட்சம், ஆசியோர் உரையாற்றினர். ''இராணிச் சாரணர்'' செல்வன் கமலசேகரம் நன்றி கூறினார்.

பஸ்ஸை பழுதுபார்த்த மெக்கானிக் அதற்கே பலி

யாழ்ப்பாணம், புதன்.

பஸ் 'டிப்போ'வுக்குள்ளேயே நடைபெற்ற பஸ் விபத்தொன்றில் மெக்கானிக் ஒருவர் நசுங்குண்டு மரணமானார். இந்த பரிதாப சம்பவம் கோண்டாவில் பஸ் டிப்போவில் திங்கட்கிழமை நண்பகல் நடைபெற்றது.

டிப்போவில் திருத்தம் செய்த ஒரு பஸ்ஸை பழுது பாற்பதற்காக பின் பக்கமாக 'றிவேஸில்' ஓடிய போதே இந்த விபத்து நடைபெற்றதாக பொலிஸ் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

மரணமான காலியைச் சேர்ந்த சேனரத்ன என்ற 28 வயது இ.போ. ச. மெக்கானிக் விபத்து நடந்த உடனேயே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சொல்லப்பட்ட போதும் அவர் இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்து நடந்த பஸ்ஸை ஓட்டியசாரதியான கோபாலு சிருஷ்ணராஜா பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

மரணவிசாரணை நடைபெறுகின்றது. கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. தர்மபாலா சாட்சிகளை ஆஜர் செய்து புலன் விசாரணை நடத்துகின்றார்.

கா. நி.

ஓடும் ரயிலில் மரணமானார்

அளவெட்டி, செவ்.

புகையிரத தலைமை பாதுகவலார் (கார்ட்)ஓடும் புகையிரதத்திலேயே மரணமானார். இப்பரிதாபகரமான சம்பவம் புளியங்குள புகையிரத நிலையத்தடியில் நடைபெற்றது.

இவர் கடமையில்ஈடுபட்டு புகையிரதத்தில் செல்லுகையில் நெஞ்சு வலி ஏற்பட்டதையடுத்தே காலமானதாக கூறப்படுகிறது.

இதுசம்பந்தமான விசாரணைக் கேற்ற ஒழுங்குகளை புளியங்குள புகையிரத நிலைய அதிபர் திரு, இரத்தினசபாபதி மேற்கொண்டுள்ளார்.

போட்டி முடிவுகள்

நாவலப்பிட்டி, செவ்.

நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்க பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கந்தோரின் காசு கணக்கிட்டுக் [illegible]

ஓய்வு பெறுகிறார்

[illegible] கொழும்பு [illegible] கந்தோரின் காசு கணக்கிட்டுக் [illegible]

சங்கிலி வழிப்பறி

முல்லைத்தீவு, செவ்.

கணவரும் மனைவியும் படம்பார்த்துவிட்டு வீடு திரும்புகையில் திடுடன் ஒரு வன் மனைவியின் 800 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடியசம்பவம் முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு வட்டாரத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு வற்றாப்பளையைச்சேர்ந்த ஒடுவர் தன் மனைவியுடன் முல்லைத்தீவில் உள்ள தியேட்டர் ஒன்றில் இரவு படம் பார்த்து விட்டு கரைச்சிக் குடியிருப்பில் உள்ள சகோதரி வீட்டை நோக்கிச் செல்கையில் பின்னால் சயிக்கிளில் சென்ற ஒரு திடுடன் மனைவியின் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடியதாக முல்த்தீவுப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கிராம குடியேற்ற திட்டம்

அளவெட்டி, செவ்.

வடபகுதியில்உள்ளகிராம மக்களின்புனர் வாழ்வுக்காக குடியேற்றங்கள் அமைக்கும் திட்டமொன்றை அரசாங்கம் வகுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வலி வடக்குப்பகுதியில் உள்ள பின் தங்கிய கிராமங்களில் ஒன்றான திடப்புலத்தில் குடியேற்றத்திட்டம்அமைப்பதற்கான காணியை நேற்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர், வலி. வடக்கு காரியாதிகாரி பி.எல். பற்றிக்ஸ், வலி. வடக்கு பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். பரராசசிங்கம் ஆகியோர் பார்வையிட்டனர்.

இம்மாதம் 15-ம் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்படஇருக்கும் குடியேற்றத்திட்டத்தில் 34 வீடுகளும் 3 [illegible] இடம் பெற உள்ளன.

குடியேற்ற திட்டவேலைகளை ஏழு குழுக்கள் சிரமதான மூலம் செய்துமுடிக்கும்.

இதற்குவேண்டிய கல், சீமெந்து போன்ற பொருள்களையும், ஒரு வீடு கட்ட 1000 ரூபாவும் வழங்குவதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இணுவில்
ஸ்ரீ காளிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
மணமா பாசமா

'அண்ணாவுக்கு சிலை எடுத்தே தீருவோம்'

அளவெட்டி, செவ்.

''கிரிமலையில் உள்ள பொது இடங்களில் அண்ணா சிலை நிறுவ அரசாங்கம் தடைசெய்தால் எமது சொந்த இடத்திலாவது சிலை அமைத்தேதீருவோம்' என ஒரு அறிக்கையை கிரிமலை நகுலேஸ்வராசனசமூக நிலையத்தலைவர் திரு.கனக மகேந்திரா வெளியிட்டுள்ளார்.

அமரர் அண்ணாவுக்கு சிலை அமைப்பதென கிரிமலை நகுலேஸ்வராசனசமூக நிலையம் திட்டமிட்டிருந்தது தெரிந்ததே.

இச்சிலையை உடுவாக்குவதில் பெரும்பகுதி வேலைகளை இச்சிலை அமைப்பாளர் திரு.சிவக்கொழுந்து செய்து முடித்துள்ளார்.

இச்சிலையை கிரிமலையில் நிறுவ அரசாங்கம் தடை விதிக்கும் என மக்களிடையேயொரு தப்பபிப்பிராயம் நிலவி வருவதையுஇ இதனால் இச்சிலை நிறுவும் நடவடிக்கை பாதிக்கப்படுமென மக்கள் கருதுவதையும் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''நாம் அரசியல் லாபத்துக்காக அண்ணாவுக்கு சிலை அமைக்கவில்லை. உலகில் தமிழன் தமிழனாக வாழ வழிவகுத்தவர்; தமிழை தரணியில் உயர்த்தியவர் என்பதற்காகவே சிலை அமைக்கிறோம்''

'நோயற்ற வாழ்வு மட்டும் சுபீட்சமாகி விடாது'

அளவெட்டி, செவ்வாய்

''நோயற்ற வாழ்வைமாத்திரம் பெற்றுவிட்டால் வாழ்வு சுபீட்சமடையாது. உளநலம், உடல்நலம், ஆத்மீக நலம் ஆகியன ஒன்று சேர்ந்து இருந்தால்தான் சந்தோஷம், சாந்தி, சமாதானம், சுபீட்சம் உள்ளவர்களாகத் திகழலாம்.''

இவ்வாறு காங்கேசன்துறைத் தொகுதி சுகாதார பரிசோதகர் திரு. செல்ப்பா, வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற உடல்கல்வி தினவிழாவில் கலந்துரையாற்றுகையில் கூறினார்.

மகாவித்தியாலய அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் கொடியேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர்தொடர்ந்து பேசுகையில்:

நாம் வீட்டை நன்றாகக் கட்டிகோட்டை கோபுரங்களில் வாழ்வது மட்டும் செல்வம் என்றுஉணராது பிள்ளைகளே செல்வம் என்று உணருகிறோம். நாம் செல்வம் என உணருவதற்கு கல்வி என்னும் உழைப்பை நன்றாகச்செய்தால்தான் அது பெருமை தரும். இந்தப் பெருமை பிள்ளைக்கு மூலகாரணமாக இருப்பது விவேகம்தான். இவ்விவேகமே கல்வியை முன்னேற்ற உதவுகிறது. இவ்விவேகம் இறைவனால் படைக்கப்படும் போதே எமக்கு உரிமையாகிவிடுகிறது. விவேகம் மற்றவர்களுக்கு [illegible]

இஸ்லாமிய ஆசிரியர் சங்க உறுப்பினர்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கம் யாழ்ப்பாணக் கிளையின் வடுடாந்தப்பொதுக் கூட்டம் யாழ். ஈதீஜா மஹா வித்தியாலயத்தில் நடைபெற்றது. பின் வருவோர் நடப்பு வருட அலுவலாளர்களாகத் தெரியப்பட்டனர்:-

தலைவர்: ஜனுப் எம்.ஏம். அப்துல்காதர், உப-தலைவர்கள்: ஜனுப்கள் ஏம். எம். யூசுப், எம். எச். எம். ரஸாக், காரியதரிசி: ஜனுப் எம். யூ. ஏ. கையூம், உப-காரியதரிசி: ஜனுப் எம். எஸ். ஏ. ரஹீம், தனாதிகாரி: செல்வி லைலாமுமினா மற்றும் ஐவர் கொண்ட செயற்குழுவும் தெரியப்பட்டது.

பின்தங்கிய கிராமத்தை அபிவிருத்திசெய்ய முயற்சி

அளவெட்டி, செவ்வாய்.

மாவிட்டபுரத்தில் பின்தங்கிய கிராமமான சாயுடை கிராமத்தை மாதிரிக் கிராமமாக அமைத்து சுகாதார, பொருளாதார அபிவிருத்தி செய்ய ஒரு உபகுழு நேற்று நடைபெற்ற வீமன்காமம் மகா வித்தியாலய ஆரோக்கிய சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் காங்கேசன்துறை பகுதிசுகாதார அதிகாரி திரு. செல்லப்பாவும், தெல்லிப்பளை சுகாதார பரிசோதகர் திரு. பத்மநாதனும் கலந்துகொண்டனர்.

மாவிட்டபுரம் கிராமத்தில் ஒரு பிரிவாக இருக்கும் சாயுடைப் புகுதியில் உள்ள மக்களின் வாழ்க்கையை நல்ல முறையில் அமைப்பதற்கான திட்டங்களை எமது சபை உப குழுவிடம் முறையிட வேண்டுமென்றும் அதற்கு உதவி செய்வது எனவும் முடிவுசெய்யப்பட்டது. உதாரணமாக நெசவு சாலைக்கு செல்லும் நெசவுசாலைகளில் பிள்ளைகள் ஒரு சேலை நெய்ய இரு தினங்கள் செல்லுகிறது இரு தினங்களிலும் ஆறு ஏழு ரூபாதான் கிடைக்கிறது. ஆனால் பனை ஈற்றில் வெங்காயக் கூடை பின்னினால் ஒரு நாளைக்கு மாத்திரம் ஆறு ஏழு ரூபா பெறலாம் எனவே இக் கிராமத்தில் ஒரு கூடை பின்னும் நிலையம் தேவையெனவும் அதற்கு ஒருஆசிரியர்தேவை எனவும் உப குழுவிடம் கூறினால் இது சம்பந்தமாக அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு இதைஅமைத்துக் கொடுக்க முயல்வது சென்றவருடம் மைலப்பை கிராமத்தை மாதிரிக் கிராமமாக்கியதுபோல் இதை ஆக்குவது போன்று முடிவுகளும் எடுக்கப்பட்டன.

இக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உப குழுவில் மாவிட்டபுரம் கிராமசேவையாளர் திரு. நடராசா, திரு வி. செல்லத்துரை, திரு. வி. மாப்பாணர், திரு. சுப்பிரமணியம் ஆசிரியர் மா. பாலசுந்தரம், ஆசிரியை சு. வேலுப்பிள்ளை ஆகியோர் இருக்கின்றனர்.

இன்று குதூகல ஆரம்பம்

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி. 544

அடிகாயங்களுடன் அனுமதி

யாழ்ப்பாணம், புதன்

அடிகாயங்களுடனும், கத்திக்குத்துக்காயங்களுடன் 55 வயதுடைய ஒருவர் மிகப்படுமோசமான நிலையில் தூக்கப்பட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட இச்சம்பவத்தில் பி. அப்புத்துரை என்பவரே தாக்கப்பட்டவராவார்.

இவர் இன்னமும் அறிவிழந்த நிலையிலேயே இருப்பதால் இவரது வாக்குமூலம் இன்னும் பதிவுசெய்யப்படவில்லை. (கா. நி.)

கடகம்- பிதாவளிச்சுகம் நிழல் தொழிலில் தடை.
சிம்மம்- பிதாவளிச்சுகம் பெரியோர் ஆதரவு.
கன்னி- அயராத உழைப்பு பயணச்சிந்தை.
துலாம் - சீரானவாழ்வு சிறு தனம் கிடைக்கும்.
விருச்சிகம் - வண்ணமயில் பிடிக்க வான்கோழி ஆகும்.
தனுசு-மக்கள் பிடிவாதம் மனதில் சோர்வு.
மகரம்-குடும்பசுகம் குறிக்கோள் வெற்றி.
கும்பம் கன்னல் வீசும் பார்வை கவனித்து நட.
மீனம்- ஏாகன சுகம் வரவிலும் திருப்தி.

— சோதிடக்கலாநிதி —
நருமலை வேலுப்பிள்ளை

மரண அறிவித்தல்

எம். சேனகரத்தினம்

உடும்பராய் வடக்கு முருகேசு சேனகரத்தினம் (மலாயன் பென்சனியர்) அவர்கள் காலமாகி விட்டார். இவர் மல்லிகை புஸ்பத்தின் அருமைக் கணவரும், இரத்தினபாக்கியம், மங்கையர்க்கரசி, புஸ்பரட்ணம், ரட்ணவல்லி, புஸ்பானந்தம் (கனடா) ஜெயரத்தினம் ஆகியோரின் தந்தையும், சிவப்பிரகாசம் (கோலாலம்பூர்) சிவசுப்பிரமணியம் (டிஸ்றிக்கோர்ட், வவனியா) இந்திரராசா (அலுப்பொல்ல குறாப்) குமாரசிங்கம் (National Savings Movement, Puttalam) ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் சமக்கிரியைகள் இன்று (12-3.69) காலை 10 மணியளவில் எருளன் மயானத்தில் நடைபெறும். தகவல் கொடுப்பவர். க. சிவசுப்பிரமணியம் 797

✶ உறுதியானதும்
✶ நடித்து உழைப்பதும்
✶ தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கப்ஸ்"

இரும்பு—பித்தளை மரஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:
என். வைத்திலிங்கப் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12,
தொலைபேசி: 7143 — 2029
கிளை- 138, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

போட்டி முடிவுகள்

நாவலப்பிட்டி, செல்.

நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்க பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி முடிவுகள் வருமாறு:

பேச்சுப் போட்டி

மேற்பிரிவு

1. செல்வன் எம். கணபதி, ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன், 2. செல்வன் வே. உமாச்சந்திரன் க. கு. ம. வி. செல்வி. பெ. நாகவள்ளி, பாலிகா மகா. வி.

மத்திய பிரிவு

1. செல்வி எம். தேவகி, பாலிகா ம. வி. 2. செல்வன் ஆர். ஜெயபாலன், ஹைலன்ஸ், அட்டன். 3. செல்வன் சி. சண்முகநாதன், பட்டித்தலாவ வித்.

கட்டுரைப் போட்டி

மேற்பிரிவு

1. செல்வன் எம். கணபதி, ஹைலன்ஸ், அட்டன், 2. செல்வன் வே உமாச்திரன், க. கு. ம. வி. 3. செல்வன் சு. சந்திரமோகன், க கு. ம. வி.

கீழ்ப்பிரிவு

1. செல்வி இ. பிரிந்தா, பாலிகா ம. வி. 2. செல்வன் எஸ். பாலகுமார், க. க. வி. 3. செல்வன் ஆர். ஜெயபாலன், ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(12-3-69)

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 8-00 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீ. அன் 61 மீ.
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.
இரவு 6-15, இசைப்பயிற்சி, 6-30 பேச்சு, 6-45 பாவளம், 7.00 கிராமசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள், 9-45 கே. கோபாலகிருஷ்ணன் - நாகசுரம்.

வைக்கப்பட்டுள்ளார்.

நிலைய அதிபர் திரு. இரத்தினசபாபதி மேற் கொண்டுள்ளார்.

ஓய்வு பெறுகிறார்

வெள்ளவத்தை, செல்.

கொழும்பு பிரதம தபாற் கந்தோரின் காசு கணக்கிட்டுக் கிளையின் பிரதம லிக்தராகக் கடமையாற்றும் திரு. ஜே. சைமன் அரியநாயகம் இம்மாதம் 16-ம் திகதி முதல் இலங்கை தபாற் தந்தித் திணைக்களத்தில் தமது 37 வருட சேவையை முடித்துக்கொண்டு ஓய்வுபெறுகின்றார்.

இணுவில்
ஸ்ரீ காளிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
குடியிருந்த கோயில்

ராணி
யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
நாகேஸ்வரராவ்-சாவித்திரி
நடித்த
தேவதாஸ் (புதிய கொப்பி)

கிங்ஸ்லி
பிளாஸா
ஸ்ரீகிருஷ்ணா
(திருமலை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மற்றும்
சினிமாஸ்திரைகளில்



சிவாஜிகணேசன்
கே.ஆர். விஜயா
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின் மகோன்னத
ஈஸ்ட்மென்
கலர்ப் படைப்பு

ஒவட்டிவரை உறவு
இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்
மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S S. வாசன்
அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

பெருமை பிள்ளைக்கு மூல காரணமாக இருப்பது விவேகம்தான். இவ்விவேகமே கல்வியை முன்னேற்ற உதவுகிறது. இவ்விவேகம் இறைவனால் படைக்கப்படும் போதே எமக்கு உரிமையாகி விடுகிறது. விவேகம் மற்றவர்களுக்கு விவேகம் வளர இறைவனின் அனுக்கிரகம் கட்டாயம் தேவை. இதைமேல் நாட்டவர்களும் நம்புகிறார்கள். விவேகம்கிடைத்தால் மாணவர்கள் கல்வி என்னும் உழைப்பில் செலுத்தி நல்ல அறிவைப் பெறலாம்.

பண்டிதர் இ நமசிவாயம் பேசுகையில்:- சைவசமய அடிப்படையிலேயே சுகாதாரம் இருக்கிறது. இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்பே ஆசாரம்என்ற சமய நூலில் சுகாதாரம் இருக்கிறது. அது ஆசாரமாக உடம்பை முன்னேற்றி நல்ல வழியில் ஒழுகவேண்டும் என கூறுகிறது. சுகாதாரத்துக்கு ஆசாரம் தேவை. எனவே ஆசாரமாக இருந்தால் தான் நாம் நோய்களில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று கூறினார்.

இவ்விழாவில் வித்தியாலய மாணவர்களின் உடற்பயிற்சி உட்பட., தேசிய கீதம், கோலாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

58வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி — ஜெமினி
சாவித்திரி
நடித்த
கப்பலோட்டிய தமிழன்
(புதிய கொப்பி)

MANOHARA
JAFFNA
Daily at: 4-45, 7-00
& 9-45 p.m.
Pre-poya, Poya 10-30 a. m.
Tony Curtis
Rosanna Schiaffino
in
ARRIVEDERCI BABY
(Panavision) (Techni color)

சுந்தரம், ஆசிரியை சு. வேலுப்பிள்ளை ஆகியோர் இருக்கின்றனர்.

இன்று குதூகல ஆரம்பம்
யாழ்ப்பாணம் —றீகல்

The Book That Enthralled 50 Million Readers Is Now "A Film Of Charm And Power!"
—LOOK Magazine

COLUMBIA PICTURES and CARL FOREMAN present
VIRGINIA McKENNA · BILL TRAVERS
BORN FREE
with GEOFFREY KEEN · Based on the international best seller by JOY ADAMSON · Written for the screen by GERALD L.C. COPLEY Music Composed and Conducted by JOHN BARRY · Produced by SAM JAFFE and PAUL RADIN · Directed by JAMES HILL
AN OPEN ROAD-HIGHROAD-ATLAS CO-PRODUCTION · PANAVISION® COLUMBIACOLOR

உங்கள் வாழ்நாளில் என்றுமே இதுபோன்ற ஒரு படத்தைப் பார்த்து ரசித்திருக்கமாட்டீர்கள்
ஒரு மனிதன்
ஒரு பெண்
ஒரு சிங்கம்
உலகத்தையே வியப்பிலாழ்த்திய அசாதாரணமான மயிர்க்கூச்செறியும் உண்மைச் சம்பவங்கள்
போன் பிறீ
தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி. ப. 4-45 மாலை 7-00, இரவு 9-45
உணர்ச்சிகரமான இந்த உண்மைக் கதை
நடந்த இடமான கென்யாவிலேயேபடமாக்கப்பட்டது.
பாட்சாலைகள் விசேஷ காட்சிக்கு ஏற்பாடு செய்யலாம்.
போன் : 360

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிச்சேரியில் தி. மு. க. கூட்டணி ஆட்சி

பாண்டிச்சேரி, மார்ச் 11

பாண்டிச்சேரியிலும் தி. மு. க. ஆட்சி ஏற்படப்போகின்றது. பாண்டிச்சேரியில் தி. மு. க. கூட்டு முன்னணி அரசு நிறுவக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாண்டிச்சேரி, காரைக்கால், மாகே, ஏனும் ஆகிய உள்ளடக்கிய யூனியன் பிரதேசத்தில் நடைபெற்ற இடைக்காலத்தேர்தலில்எந்தக்கட்சியும் அரசாங்கத்தை தனியாக அமைப்பதற்கு பலம் பெறுவோனாலும் தி. மு. க. மற்றக்கட்சிகளை விட அதிக இடங்கப்பெற்றிருக்கின்றது. இதனால் பாண்டிச்சேரியில் தி. மு. க. வும் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைக்கலாம் என்று எதிர்பாக்கப்படுகின்றது.

இந்தத்தேர்தலில் தி. மு. க. வும் கம்யூனிஸ்ட் கட்சியும் தேர்தல் உடன்பாடு செய்துகொண்டு போட்டியிட்டன. 30பேர்களைக்கொண்டசட்டசபைக்கு தி. மு. க. 19 இடங்களில் போட்டியிட்டு 15 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி ஏழு இடங்களில் போட்டியிட்டு மூன்று இடங்களில் வெற்றிபெற்றுள்ளது, முப்பது இடங்களுக்கும் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியினால் 10 இடங்களை மட்டுமே பிடிக்கமுடிந்தது. 20 இடங்களில் போட்டியிட்ட சுயேச்சைகளில் கேரளத்தினருகிலுள்ள மாகேயில் ஒருவரும், ஆந்திரப்பிரதேசத்தினருகிலுள்ள ஏனத்தில் ஒருவரும் வெற்றிபெற்றுள்ளனர்.

1964-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் காங்கிரஸ்கட்சி 22 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சியை அமைத்திருந்தது. இடையில் காங்கிரஸ் அங்கத்தவர்களுக்கிடையில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு பலர் கட்சிமாறினார்கள். ஆனால் காங்கிரஸ் ஆட்சி அங்கு வீழ்ச்சியுற்று ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டிருந்தது.

99வருடச்சிறைத்தண்டனை கிங் கொலைகாரனுக்கு

நியூயோர்க், மார்ச் 11

நீக்ரோத் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர்கிங்கை கொலைசெய்ததகுற்றத்திற்காக ஜேம்ஸ் ஏர்ல்-றே என்பவருக்கு நேற்று 99 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்தவருடம் ஏப்ரல் மாதம் மெம்ஃபிஸ் நகரில் ஓட்டல் ஒன்றில் வைத்து நீக்ரோகுடியுரிமைபோராட்டவீரரான டாக்டர் வண. மார்ட்டின் லூதர்கிங் சுட்டுக்கொலைசெய்யப்பட்டிருந்தார்.

இந்தக்கொலைசம்பந்தமாக ஜேம்ஸ் ஏர்ல்-றே என்பவர் அமெரிக்க பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு மெம்ஃபிஸில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுவந்தார்

இந்த விசாரணை, 10பேர்களையுடும் இரு கறுப்பர்களுமான ஜூரர்களின் முன்னிலையில் நடைபெற்றது ஜேம்ஸ் ஏர்ல்-றேகுற்றத்தை ஒப்புக்கொண்டார்.

ஜூரிசபையினர் மந்திராலோசனை செய்வதற்காக கலைந்து செல்லாமலே தமது விசாரணை மேடையிலிருந்து தீர்ப்புப்பற்றிய முடிவை உடனடியாகத் தீர்மானித்து ஆதரித்தனர். ஜூரிசபையினரின் முடிவை அனுசரித்த நீதிபதிதீர்ப்பைவழங்கினார்.

வெறும்பட்டத்தினால் என்னபயன் கிழித்துஎறிந்தார் மாணவர்

ஜலந்தர், மார்11

பல்கலைக்கழக பட்டத்திற்கான சான்றிதழை ஒரு மாணவர் கிழித்தெறிந்தார். வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் இல்லாத பட்டத்தில் என்ன பயன்?எனறுஅந்தமாணவர் கேட்டார்.

பஞ்சாப் மாநிலம் லந்தரில் இப்பட்டமளிப்பு இடம் பெற்றது. ஆனால் பூர்கால்சா கல்லூரியைச் சேர்ந்த

நீலாம்பரி பாடினால் மழை பெய்யுமாம்

Digitized by Arodhanam Foundation.
www.tamilvanam.org

தி. மு. க.

"சாபக்கேடான தீண்டாமையை களைந்தெறிய வேண்டும்"

--நீதியரசர்

வெள்ளவத்தை, செவ். "எமது சைவசமயத்திலே தீண்டாமை ஒரு பெரிய சாபக்கேடு.மனித உடலிலே புண் இருப்பதுபோலவே தீண்டாமையும் இடையிலே வந்து சமயவாதிகளுடன் ஒட்டிக்கொண்டுள்ளது. இதைக் களைந்தெறிய அனைவரும் முன்வரவேண்டும். சைவத்திற்கும் தமிழுக்கும் அரிய தொண்டாற்றிய ஆறுமுகநாவலரின் பெருமைகளை நாம் போற்றவேண்டும். அவரது நூல்களை மலிவாகப் பதிப்பிக்க முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாவலருக்குச் சிலை அமைப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது அவர் பரப்பிய அறநெறிக் கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்பவேண்டும். எமது சைவ சமய உண்மைகளை உணர்ந்து பிரயோசனமடைவதைவிடுத்து வேறு சமயங்களைச் சேர முயல்வது அறிவீனம்"

இவ்வாறு மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் இலங்கை சட்டமாணவர் இந்து மகாசபைஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாசபைத் தலைவர் திரு. ஆ. வ. க. நீலகண்டன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி யும் இந்து இளைஞர் மன்றத் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரமும் உரைநிகழ்த்தினர்.

வழக்கறிஞர் திரு. எஸ். வீரகத்திப்பிள்ளை தயாரித்தளித்த கொட்டாஞ்சேனை சுலையரங்க மாணவிகளான மாலினி செல்லத்துரை விக்னேஸ்வரி காளியப்பன் ஆகியோரின் பரதநாட்டியமும் விமல் சொக்கநாதன் அளிக்கும் எஸ். ராமதாஸ் நடித்த "எழுத்தாளர் ஜாக்கிரதை" என்ற நகைச்சுவை நாடகமும் இடம் பெற்றன.

ஆரம்பத்தில் வழக்கறிஞரும் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவருமான திரு. ச. சோமசுந்தரம் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். சட்டக்கல்லூரித் தமிழ் மன்றத்தலைவர் திரு. செ. விவேகானந்தன் நன்றி கூறினர்.

ஆராய்ச்சி செய்யும் புலவர்களுக்கு

டாக்டர் பட்டம் வழங்கக்கோரிக்கை

கூடுப்பிட்டி, செவ்வாய் "காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் திரு. பண்டாரநாயக்கா சிங்களப் பண்டிதர்களைப் பட்டதாரிகளுக்குச் சமமாகவும், ஒரே சம்பளத்திற்குரியவளர்களாகவும் அனுமதித்திருக்கிறார்.

இதேபோன்று தமிழ்ப் பண்டிதர்களுக்கும் 1959-ல் இச்சலுகை அனுமதிக்கப்பட்டது. ஆனால் இதுவரையும் அதேயளவு சம்பளம் தமிழ்ப்பண்டிதர்களுக்குக் கொடுக்கப்படவில்லை."

இவ்வாறு கரவெட்டி வாணிகலைக்கழக இயற்குநர் பண்டிதர் திரு. க. வீரகத்தி இலங்கைத் தேசிய உயர்கல்விச்சபைத் தலைவர் திரு. வீ. வீ. பி. மல்லிகேசராவுக்கு தமிழ் அறிஞர்களுக்கும் டாக்டர் பட்டம் வழங்கவேண்டும் என்பதை பண்டிதர்களும், புலவர்களும் இலக்கிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். பல்கலைக் கழகங்களினால் அவை தகுதியானது என ஏற்றுக்கொள்ளப்பட்டால் அதனைச் சிருஷ்டித்தவருக்கு டாக்டர் பட்டம் வழங்கலாம் இம்முறையைப் பின்பற்றும்போது தென்இந்தியா வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களைப் பின்பற்றவேண்டும்.

இனவாரியாக பாகுபாடு

டாக்டர் நைல்ஸ் கருத்து

அராலி, செவ்வாய் இந்த நாட்டிலே தமிழர்களாகிய நாம் இழிவு நிலை

தினமும் தேகப் பயிற்சி தேவை

உடும்பராய், செவ். "நமது உடல் உறுதியடைய நாம் தினமும் தேகப் பயிற்சிகளைச்செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் நமது உடல் உறுதியடையும். உடல் உறுதியாக இருந்தால் மட்டுமே நாம் இவ்வுலகில் ஆரோக்கியமான சந்தோஷவாழ்வினையடையமுடியும். எதிர்காலப் பிரசைகளான உங்கள் உடல் உறுதியிலேயே எமது நாட்டின் உயர்வு தங்கியுளது."

அகில இலங்கை சுகாதார விளையாட்டு தினத்தை முன்னிட்டுதிங்கட்கிழமை உடும்பராய்சைவத்தமிழ்வித்தியாசாலையில் நடைபெற்ற சுகாதார வாரக் கொண்டாட்டத்தில் உரையாற்றிய முன்னாள் சுகாதாரசேவை அத்தியட்சகர் டாக்டர் க. சிவஞானரத்தினம் வித்தியாலய மாணவர்கள் முன்னிலையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் சு. குமாரசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவஞானரத்தினம் பேசினார்.

ஆரம்பத்தில் வித்தியாலய திறந்த வெளியரங்கில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களின் அணிநடை மரியாதையை டாக்டர் க. சிவஞானரத்தினம் வித்யாலய அதிபர் திரு. சு. குமாரசேகரமும் ஏற்றுக்கொண்டதையடுத்து விளையாட்டு வீரர்கள் தேகப்பயிற்சி விளையாட்டுக்கள் பலவற்றைச் செய்து காட்டினர்.

கொழும்பில் மகாநாடும் கண்காட்சியும்

வெள்ளவத்தை, செவ் திண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினரின் பொதுக்கூட்டமொன்று இம்மாதம் 16-ம் திகதி கொழும்பு செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. தீண்டாமையால் பாதிக்கப்பட்டுள்ள சமூகங்களின் வேதனைகளையும் குறைபாடுகளையும் சித்தரித்து பார்வையாளரை சிந்திக்கவைக்கவல்ல சித்திரக் கண்காட்சியொன்றுஇம்மாதம் 17-ம் 18-ம் திகதிகளில் கொழும்பு லயனல் வென்ட் தியேட்டரில் நடைபெறும்.

ஏப்ரல் மாதம் 4-ம் திகதி ஹாவ்லொக் டவுன் ஹாலில் திரு. சிவஞானரத்தினம் பேசினார்.

சிரமதான வேலைகள் வடக்கில் குறையும்

யாழ்ப்பாணம், புதன் கடந்த வருடங்களைப் போல இந்த வருடமும் அதிகமான சிரமதானவேலைகள் வடபகுதியில் மேற்கொள்ளப்படமாட்டா. திட்டமிட்ட சிலகுறிப்பிட்ட சிரமதான வேலைகளே இவ்வருடத்தில் வடக்கே மேற்கொள்ளப்படும்.

சிரமதானத்தோடு சம்பந்தப்பட்ட இலாகாவின் உயர் அதிகாரிகள் இந்த முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் மிகக் குறைந்த தொகையே வடக்குக்கு சிரமதானத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளதும் இங்குள்ள சிரமதான பணிகளை குறைக்கவேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது

இதுவரை சிரமதானத்துக்குக்கிடைத்த விண்ணப்பங்கள், பரிசிலனை செய்யப்பட்டு, அவற்றில் ஒரு சில தெரிந்தெடுக்கப்பட்டு, அதன்பின் அவை சம்பந்தப்பட்ட இலாகா உயர் அதிகாரிகளின் அங்கிகாரம் பெற்றபின்னரேமேற்கொள்ளப்படும்.

இந்தரீதியில் வடபகுதியில் மொத்தம் எண்ணூயிரம் ரூபாவுக்கு உட்பட்ட பெறுமதியான சிரமதான வேலைகளே மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமையிலான ஒரு குழு இம்மாதம் 18-ம் திகதி முதல் சிரமதான விண்ணப்பங்களைப் பரிசிலனைசெய்யும். அதன்பின்னரே குறிப்பிட்ட சில விண்ணப்பங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, அமைச்சின் அங்கிகாரத்துக்கு அனுப்பப்படும் என சிரமதான இயக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1966-67 ஆண்டில் சிரமதானப்பணியில் வடபகுதியே முதலிடம் பெற்றிருந்தும் இவ்வருடம் வடக்குக்கு மிகக்குறைந்தபணமே சிரமதானத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அதிகாரிகளுக்கும் பொதுச் சங்கங்களுக்கும் பெரும் அதிருப்தியைக் கொடுத்துள்ளது. (கா. நி.)

'உங்களுக்கு உதவுவதற்காக எமக்கு உதவுங்கள்'

பொலிஸ் அதிகாரி வானொலியில்வேண்டுகோள்

கோட்டை, செவ். 'உங்களுக்கு உதவி செய்வதற்காக எங்களுக்குஉதவி செய்யுங்கள். நாட்டில்வளர்ந்துவரும் களவுகளையும் குற்றங்களையும் தடுப்பதற்கு தற்போது இலங்கையில் உள்ள பொலிசாரின் எண்ணிக்கை போதாமலிருக்கிறது. 100 பேருக்கு ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் வீதம்10,538பொலிசார் மட்டுமே இங்கு கடமை புரிகிறார்கள். இந்த எண்ணிக்கையுள் சாரதிகளும் அலுவலகத்தில் கடமையாற்றுபவரும் அடங்கியுள்ளனர். ஏனைய பிற நாடுகளில் 500 பேருக்குஒரு பொலிஸ்வீதம் கடமையாற்றுகின்றனர். நாட்டில் அதிகரித்து வரும் குற்றங்களை தடுக்க இங்குள்ள எண்ணிக்கை போதாதிருக்கின்றது.

தகவல் பொதுஜனதொடர்பு உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்ட்திரு டி. எச். ஆர். ஏ கொரியா கடந்த 6-ந் திகதி மாலை இலங்கையில் வானொலிமூலம் விடுத்த வேண்டு கோளொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் உதவி இதைச்செய்யும்படி கேட்கிறோம். தொண்டர்படையையும், விசேஷ பொலிசாரையும் நாம் நியமித்து அவர்களின் உதவிகளைப்பெறுகிறோம். அவர்களின் உதவி சட்ட ரீதியானதா என்று நீங்கள் கேட்கலாம். ஆம். குற்றத்தடுப்புச் சட்டத்தின் 35-ம் ஷரத்தின்படி, ஒரு தனநபர் தனதுமுன்னிலையில் குற்றஞ் செய்தவரையும், சந்தேகிக்கப்படுபவரையும் கைதுசெய்ய அதிகாரமுண்டு. ஆகையினால் ஒவ்வொரு தனிநபருக்கும் பொலிசாருடன் குற்றங்களைத்தடுக்க அதிகாரமுண்டு. இதிலிருந்து பொலிசாருக்கும், பொதுமக்களுக்கும் குற்றத்தைத் தடுக்கும்வகையில் ஒரே அதிகாரமுண்டு என்பது வெளிப்படையாகிறது. ஓமாட்டார் வாகனம் சம்பந்தமானகலால்இலாகா சம்பந்தமான குற்றங்களை பொறுத்தமட்டில் பொதுமக்கள் பொலிசாருக்குஉதவி செய்யமுடியாது. ஏனைய குற்றங்களில் தனிநபர் பொலிசாருக்கு உதவிசெய்ய முடியும்.

விசாரிக்கப்பட்டுவந்தார் நீதிபதிதீர்ப்பைவழங்கினார்
இந்த விசாரணை, 10ஞ்ன்

நீலாம்பரி பாடினால் மழை பெய்யுமாம்

தமிழக மேல்சபையில் டி.கே.சண்முகம் கூறியது

சென்னை, மார்ச் 11

பருவமழை தவறிவிட்டதால் 'மேகராக குறிஞ்சி' எனக் கூறப்படும் நீலாம்பரி ராகத்தை கோஷ்டி கானமாகப்பாடினால் மழை பெய்யும் என்றும் இதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் திரு. டி. கே. சண்முகம் மேல்சபையில் நிதிநிலை அறிக்கை மீது பேசுகையில் கூறினார்.

இதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. என். ஆர். தியாகராஜன் குறுக்கிட்டு "ஒரு வேளை நீலாம்பரி ராகம் பாடி மழைவராமல்போனால் முகாரி ராகம்பாடினால் மழை வருமா?' என்று கேட்டார்.

திரு. சண்முகம்: "எதிர்க்கட்சித் தலைவருக்கு எப்போதும் முகாரியில்தான் விருப்பம் அதிகம்" என்றார்.

மேல்சபையில் கலைத்துறைப் பிரதிநிதியாக திரு. சண்முகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருஞானசம்பந்தர் இயற்றிய பாடலை மேகராக குறிஞ்சியில் பாடினால் மழை நிச்சயம்வரும்என்று சென்றடிசம்பரில் நடந்த தமிழ் இசைச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பண் ஆராய்ச்சி மகாநாட்டில் பல சங்கீத நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். பக்தி பூர்வமாகவும், மிக நன்றாகவும் பாடக்கூடிய ஓதுவாமூர்த்திகளின் மூலமாக மேற்படிராகத்தை கோஷ்டிகானமாக இசைத்தால் மழை வரலாம் என்று கூறிய திரு சண்முகம் பக்தியில் நம்பிக்கை கொண்டதால் இதை நம்புவதாகவும், ஆகவே அரசின் அறநிலைய போர்டின் ஆதரவுடன் தமிழக மெங்கும் உள்ள கோவில்களில் நீலாம்பரி ராகத்தில் திருஞானசம்பந்தரின் பக்திப் பாடல்களைப் பாட அரசு ஏற்பாடு செய்து முயன்றுபார்க்கலாமென்றும் கூறினார்.

விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி குறுக்கிட்டு, "அரசின் அறநிலைய ஸ்தாபனத்தின் அனுமதி ஏதுமின்றி கனம் அங்கத்தினரே மிகவும் நன்றாகப் பாடக்கூடிய கலைஞராதலால் இம்முயற்சியை மேற்கொள்ளலாமென்றும், பரீட்சார்த்தமாக ஒரு பகுதியில் இம்முயற்சியில் அவர் மேற்கொண்டு மழையும் வந்துவிட்டால் மற்றப்பகுதிகளுக்குப் பிறகு அரசே விஸ்தரிக்கலாமென்றும் மாற்றுயோசனையைக் கூறினார்.

இதை பெரிய அளவில் அரசால் செய்யக்கூடிய காரியமே தவிர தனிப்பட்ட தன்னைப்போல ஒருவரால் செய்யக்கூடிய காரியமல்ல என்று இதற்கு திரு. சண்முகம் பதிலளித்தார்.

—

யூகோ.-கம். மாநாடு

ரஷ்யா பகிஷ்கரிப்பு

பெல்கிரேட், மார்ச். 11

யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாட்டை சோவியத்யூனியனும் அதன் தோழமைக் கட்சிகளான ஆறுநாடுகளும் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளன. யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாடு இன்று ஆரம்பமாகின்றது.

ரஷ்யாவுக்கும் யூகோஸ்லாவியாவுக்குமிடையில் அடிப்படைக் கொள்கையில் கருத்துவேறுபாடு ஏற்பட்டிருப்பதே இந்தப் பகிஷ்கரிப்புக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

—

சீனா ஆட்சேபம்

ஹங்காங், மார்ச் 11

சோவியத் யூனியனின் சீன தூதரகத்துக்கு முன் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களை ஆட்சேபித்து சீன அரசாங்கம் சோவியத்யூனியனுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

ஆர்ப்பாட்டங்களை உடனடியாக நிறுத்தும்படியும், தூதரகத்துக்கு விளைவிக்கப்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கும்படியும் அவர்கள் கோரியுள்ளனர்.

தரவாதம் இல்லாத பட்டத்தில் என்ன பயன்? என்று அந்தமாணவர் கேட்டார்.

பஞ்சாப் மாநிலம் லந்தரில் இப்பட்டம் ஒப்பு இடம் பெற்றது. லியால் பூர்கால்சா கல்லூரியைச் சேர்ந்த மாணவர் தமக்கு அளிப்பட்ட சான்றிதழை பண்டபத்திலேயே கிழித்து எறிந்தார். இந்த விழா நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில்நடந்ததை எதிர்த்து எம். ஏ. மாணவர்கள் 4பேர் பட்டங்களை வாங்க மறுத்துவிட்டார்கள்

பிரான்சில் வேலைநிறுத்தம்

பாரிஸ், மார்ச். 11

பிரான்சில் சம்பள உயர்வு கோரி மிகப்பெரிய தொழிற்சங்க சம்மேளனம் ஒன்று 24 மணிநேர வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளது. இந்த வேலைநிறுத்தம் பிரான்சை மிகவும் மோசமாகப் பாதிக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது.

— —

பர்மாவில் கிளர்ச்சி

ரங்கூன், மார்ச். 11

பர்மாவில் கிளர்ச்சிக்காரர்கள் இரண்டு இடங்களில் ஒளித்திருந்து தாக்குதல்களை நடத்தியிடுக்கிறார்கள். இந்தத் தாக்குதலில் எட்டு ஆருப்புகள் உடபட 17 பேர் கொலையுண்டதாகக் கூறப்படுகின்றது.

— —

ஆடுகளவு ஒருவர் கைது

யாழ்ப்பாணம், புதன்

களவாடிய ஆட்டின் வயிற்றுக் குள்ளிருந்த குட்டியை கிணற்றுள் எறிந்துவிட்டு, ஆட்டை வெட்டி இறைச்சியாக விற்றார்களாம். ஐவர் இவர்களுள் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுதுமலை வடக்கைச் சேர்ந்த பெண்ணொருவர் ஆனைக்கோட்டை பொலிஸில் செய்த புகாரைத் தொடர்ந்தே சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

60 ரூபா பெறுமதியான ஆட்டைக் களவாடியதென்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இவர் 300 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு 20-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டார்.

(கா. நி.)

இவ்வாறு சுரவெட்டி வாணிகலைக்கழக இயற்குநர் பண்டிதர் திரு. க. வீரகத்தி இலங்கைத் தேசிய உயர்கல்விச்சபைத் தலைவர் திரு ஜீ. வீ. பி. மல்லசேகராவுக்குத் தமிழ் அறிஞர்களுக்கும் டாக்டர் பட்டம் வழங்கவேண்டும் என்பதை வற்புறுத்தி அனுப்பி வைத்துள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டு இருப்பதாவது:-

"கொழும்பு கீழைத்தேசக் கல்விச்சபையினாலும், யாழ்ப்பாணக் கீழைத் தேசக்கல்விச்சபையினாலும் நடாத்தப்படும் பரீட்சைகளில் பண்டிதர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களும், தென் இந்திய பல்கலைக்கழகங்களில் இருந்து புலவர்களாகவும், வித்துவான்களாகவும் சித்தியடைந்தவர்கள் ஈழநாட்டில் பலர் உள்ளனர்.

பண்டிதர்களுக்கும் புலவர்களுக்கும் உரிய பாடத்திட்டம் கலைப்பட்டதாரிகளுக்குரிய பாடத்திட்டத்திலும் மாத்திரமல்ல எம். ஏ.பட்டதாரிகளுடையதிலும்பார்க்க விசால மானதென்பதற்குக் கடந்தகால ப் பரீட்சைக் கேள்விப்பத்திரங்கள் நல்ல சான்று பகரும்.

பண்டிதர்களும், புலவர்களும், வித்துவான்களும் இலவச கல்வி அமைப்பில் பல்கலைக்கழத்தில் புகுந்து கற்பதற்கு உரிமை மறுக்கப்பட்டிருப்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். மேற்படி பண்டிதர்களுக்கும், புலவர்களுக்கும் டாக்டர் பட்டம் வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையுமில்லை. ஆனால் அதற்கு அருகதையில்லாதவர்களுக்கும் இப்பட்டம் வழங்கப்படுமாயின் உயர் தரக்கல்விச் சபைக்கும், இந்நாட்டிற்கும் ஒரு களங்கத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

— — — — — — — —

வலைகள் விற்பனை

காங்கேசன்துறை,செவ்.

மயிலிட்டியில் இம்மாத இறுதியில் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினரால் கொடுக்கப்பட்ட மீன்பிடி வலைகள் நூல்கள் விற்பனவு நிலையம் ஒன்று திறக்கப்படவிருக்கின்றது.

இவ் விற்பனவு நிலையத்தில் மலிவான முறையிலும் பங்கு விகித முறையிலும் நூல்கள், வலைகள் மீன்பிடி உபகரணங்கள் விநியோகிக்கப்படும். இவ் விற்பனவு நிலையத்தை திறந்து வைப்பதற்கு மீன்பிடிக்கூட்டுத்தாபனத் தலைவர் வரவிருக்கிறார்.

இனவாரியாக பாகுபாடு

டாக்டர் நைல்ஸ் கருத்து

அராலி, செவ்வாய்

இந்த நாட்டிலே தமிழர்களாகிய நாம் இழிவு நிலையை நாடிச் சென்று கொண்டிருக்கிறோம். இனவாரியாக நாம் பாகுபடுத்தலுக்கு இரையாகின்றோம். எமது சமூகத்தைத் தாழ்ந்த நிலைக்குச் செல்லவிடாது நாம் எதிர்த்துப் போராட வேண்டும்.

இவ்வாறு லட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வண. டாக்டர் நைல்ஸ் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:- "இன்று எந்தத் துறையிலும் அரசியல் தலையீடு உள்ளது. சமூகமோ பெற்றோரோ தம் பிள்ளைகளின் கல்வியில் பங்கு கொள்ள இடமில்லை. யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகமென்றால் அதில் அரசியல் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் இன்று இடமாற்றம் என்ற போர்னவயில் எறிபந்துகளாக பாவிக்கப்படுகின்றனர். இதிலும் அரசியல் இந்த நிலை நிலவும் வரை நாம் எமது பிற் சந்ததியினருக்கோ சமூகத்திற்கோ எதையும் திட்டமிட்டுச் செய்ய முடியாத நிலையிருந்தேதீரும்.

கல்லூரியின் புதிய அதிபர் திரு. கதிரகாமரின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திருமதி நைல்ஸ் பரிசில்களை வழங்கினார்.

பண்டத்தரிப்பு ஆண்கள் பாடசாலை அதிபர் திரு. என். சிவஞானம் நன்றியுரை கூறினார்.

—

வெளிச்ச வீடு

காங்கேசன்துறை, செவ்.

கோவளம் வெளிச்சவீடு மீண்டும் திருத்தப்பட்டு இயங்கிக் கொண்டிருப்பதாக வெளிச்ச வீடுகளின் பரிசோதகர், மயிலிட்டி கிராம முன்னேற்ற அபிவிருத்தி சங்கமும் சனசமூக நிலைய காரியதரிசியுமான திரு. எம். சிவகுருநாதனுக்கு கடித மூலம் எழுதியுள்ளார்.

இவ்வெளிச்ச வீட்டு வெளிச்சம் இல்லாததையிட்டு வட கரையில் உள்ள மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்று திரும்புவது மிகவும் கஷ்டமாக விருந்தது குறிப்பிடத் தக்கது

தரித்து பார்வையாளரை சிந்திக்கவைக்கவல்ல சித்திரக் கண்காட்சியொன்றுஇம் மாதம் 17-ம் 18-ம் திகதிகளில் கொழும்பு லயனல் வென்ட் தியேட்டரில் நடைபெறும்.

ஏப்ரல் மாதம் 4-ம் திகதி ஹாவ்லொக் டவுண் லும்பினி அரங்கில் சாதிஅமைப்புச் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகள் நாடகம் என்பனவற்றையும் இங்குள்ள முற்போக்கு இயக்கம் ஒழுங்கு செய்துள்ளது. நாட்டின் பல பாகங்களிலுமிருந்து கலைஞர்களும் எழுத்தாளர்களும் இத்தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் கலந்து கொள்வர். கவிதைகளும் லும்பினியில் அரங்கேற்றப்படும்.

—

ஆயிரம் ரூபாய் பிணையில் அனுமதி

வல்வெட்டித்துறை, செவ்வாய்

கடந்த மாதம் 25-ந் திகதி உடுப்பிட்டியைச் சேர்ந்த நவரத்தினம் மகள் அமிர்தவல்லி வயது 20 என்னும் இளம்பெண்ணையும் அவரது சகோதரன் லோகநாதன் வயது 12 ஆகிய இருவரையும் துப்பாக்கியால் சுட்டுபடுகாயம் உண்டு பண்ணியதாக அதே இடத்தைச் சேர்ந்த மயில்வானம் இளையதம்பி, இளையதம்பி சிவலிங்கம் ஆகிய இருவரையும் வல்வெட்டித்துறைப் பொலிசார் கைது செய்து றிமாண்டில் வைக்கப்பட்டு படுத்தித்துறை பதில் மாஜிஸ்திரேட் திரு. கே. இரத்தினசிங்கம் முன்னிலையில் மீண்டும் ஆஜராக்கியபோது மாஜிஸ்திரேட் எதிரிகள் இருவரையும் தலா ரூபா 1000 பிணையில் செல்லுமாறும் இம்மாதம் 30-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

ரபு உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்ட்திரு டி. எச். ஆர். ஏ. கொரியா கடந்த 6-ந் திகதி மாலை இலங்கையில் வானொலிமூலம் விடுத்த வேண்டு கோளொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் உதவிகள்பொலிசாடுக்கு ஏன் தேவைப்படுகிறது என்பது பற்றி அவர் தமது உரையில் விளக்கினார்.

குற்றத்தடுப்புச் சட்டத்தின் 19-ம் ஷரத்தில் நாட்டில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் பொது மக்களின் பொருட்களை நாசப்படுத்தும் குளப்பங்களைவிளைவிக்க காரணமாயிருக்கும் எவரையாவது கைது செய்வதற்கு தனிநபர் ஒருவரின் உதவியை பொலிசார்கோரினால் அவர்கள் உதவி கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக உடனடியாக பொலிசாரின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாமலிருப்பதனாலும் நாம்பொது மக்களின் உதவியை நாட்டில் குற்றத்தை தடுப்பதற்காக கோரவேண்டியுள்ளது. இவ் வேளையில்பொது மக்களின் உதவி எங்களுக்கு அத்தியாவசிய மாகிறது என்றுதிரு கொரியாமேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது.

சம்பந்தமானகலால்இலாகா சம்பந்தமான குற்றங்களை பொறுத்தமட்டில் பொது மக்கள் பொலிசாருக்குஉதவி செய்யமுடியாது. ஏனைய குற்றங்களில் தனிநபர் பொலிசாருக்கு உதவிசெய்ய முடியும்.

— —

பொய்ப்புகார் பொலிசுக்கு தலையிடி

யாழ்ப்பாணம், செவ்

பொய்யான புகார்களை பொலிஸ் நிலையத்தில் செய்பவர்களில் வட பகுதியில் முன்னணி வகிப்பவர்கள் கோப்பாய் பொலிஸ் பகுதி மக்கள் தானும். இந்தப் பொய்ப்புகார்கள் பற்றிய விபரம் அண்மையில் இங்கு பொலிஸ் அதிகாரியினால் பரிசோதனை நடத்தப்பட்ட போதே தெரியவந்தது.

களவு வழக்கொன்று நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும்போதுகளவுபோனதாகத் தெரிவிக்கப்பட்ட பொருள் புகாரைச் செய்தவரது வீட்டிலிருந்தே பின்னர் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டதாகபொலிஸ் அறிக்கையில்இருந்து தெரியவந்ததாம்.

இதுபோன்ற பல பொய்ப்புகார்கள் இங்கு பதியப்பட்டிருந்ததும் இங்கு பரிசோதனை நடத்தப்பட்ட போது தெரியவந்ததாம், புகார்களை சரியானமுறையில் விசாரணை செய்யாதிருப்பதும் இதற்கு காரணமாக விருக்கலாம் என வடபகுதி உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

(கா, நி)

தம்பி அன் கோ.

வண்ணார்பண்ணையில்

ரூ. 10000/- தொடக்கம் ரூ. 30000/- வரை

சீதன சேமிப்புக்கு

வருடம் 12 சத வீதம் வட்டி

கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வருடமும் வட்டி எடுக்கலாம்.

குறிப்பு:-
இப் பணத்தை 30 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நாம் உடல் உழைப்புக்கு மேலும் கௌரவம் கொடுக்க வேண்டும். உடல் உழைப்பு ஒரு அவமானச் சின்னமாகும் என்ற கருத்தை அகற்ற வேண்டும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: ''EELANADU'' Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 29-ந் திகதி
(12 - 3 - 69)

ஏன் இந்த அநியாயம்?

இலங்கை ரோயல் விமானப்படைக்குத் தெரிவு செய்யப்பட்ட இருவர் பயிற்சி பெறச் சென்ற பின்னர் சிங்களம் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் என்று காரணம் கூறி வெளியேற்றப் பட்டிருக்கின்றனர். இவர்களில் ஒருவர் தமிழர், மற்றவர் ஒரு முஸ்லிம். விமானப் படையில் சேர்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்ட பொழுதோ, பின்னர் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் போதோ சிங்களம் பற்றி எந்த விதநிபந்தனையும் விதிக்கப்படவில்லை. விண்ணப்பத்தில் கோரப்பட்ட தகைமைகள் இருந்ததால் அவர்களிருவரும் தெரிவு செய்யப்பட்டு தியத்தலாவையில் பயிற்சிக்கு அனுப்பப்பட்ட பின்னரே சிங்களம் எழுதப்படிக்கத் தெரியாது என்று அங்கிருந்த 'மேதைகள்' இந்த இரு இளைஞரையும் வேலையற்றோர் பட்டியலில் சேர்த்து விதியில் விட்டிருக்கின்றனர். இது பற்றி சென்ற வாரம் ஆட்சி மன்றத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்த போது, இச்சம்பவம் பற்றித் தாமும் விசாரித்ததாகவும் இதற்குக் கிடைத்த விளக்கம் தமக்கும் திருப்தியளிக்கவில்லையென்று தெரிவித்திருந்தார். விளக்கம் மட்டுமல்ல தியத்தலாவை பயிற்சி முகாம் 'மேதை' களின் செயலே அதிருப்தியளிக்கக் கூடியது. இந்த அநீதியான செயலுக்குக்கொடுத்த விளக்கம் எப்படித்திருப்தியளிக்கும்? மற்றொரு தமிழருக்கும் விமானப்படை தடை போட்டிருக்கிறது.

ஒரு பக்கம் மொழி பேதம் காட்டி தமிழ் பேசும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படுகிறது; மறுபக்கம் அரசாங்க சேவையில் நீண்டகாலம் பணியாற்றியவர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லையெனக் காரணம் வேறுதா என்பது வேறு விஷயம். இந்த நாட்டு மக்களின் ஒரு பிரிவினர், இந்த நாட்டைத் தாயகமாகக் கொண்டு, இந்த நாட்டுக்காக உழைத்த மக்கள், இந்த நாட்டின்சுதந்திரத்தை அனுபவிக்க உரிமையுள்ளவர்கள், தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களாகப் பிறந்து விட்ட காரணத்தினால் அரசாங்க சேவையில் சேருவதற்குள்ள இடையூறுகளையும், அரசாங்கத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தாலும் 'தமிழர்' என்பதற்காக வெளியேற்றப்படுவதையும், 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்', ''இன, மத, மொழி பேதம் காட்டமாட்டோம்'', ''எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிப்பதே நமது கொள்கை'' என்று தேசிய ஐக்கியத்தை நிலை நாட்ட வந்த பிரதமரின்தும் இந்த நாட்டு மக்களினதும் கவனத்தை ஈர்க்க இது உதவுமென்பதுநிச்சயம்.

தேசிய ஐக்கியம் உண்மையிலேயே இங்கு நிலை நாட்டப்பட வேண்டுமானால் நாடு பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமானால் இன, மொழிப் பாகுபாடு காட்டி அரசாங்க சேவையில் சேர தமிழ்பேசும் மக்களுக்கு கதவடைப்புச் செய்யும் அற்பத்தனமான செயல்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

இதேசமயம் தமிழ்த் தலைவர்களும் தமிழ்ப் பிள்ளைகளும் அரசாங்க சேவையில் சேரும் தமிழர்களும் சிங்களம் படிப்பது சம்பந்தமாக தங்கள் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம். அரசியல் இலாபத்துக்காக எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட இந்த மொழி விஷயத்தில் இனியும் கண்ணாமூச்சி விளையாடுவது நல்லதல்ல.

தமிழ்ப்பகுதிகளில் தனியார் நடத்தும் வகுப்புக்களி

எந்தக கோணத்தில் பார்த்தாலும்

உடுப்பிட்டி எம்.பி.யும், ஆட்சி மன்ற உபசபாநாயகருமான திரு.மு.சிவசிதம்பரம், 8ந்திகதி, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற, சட்டக்கல்லூரி இந்துமாணவர் மன்ற ஆண்டுவிழாவிலே கலந்துகொண்டு, 'சைவ இளைஞரின் சிந்தனைக்கு!' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவொன்று நிகழ்த்தினார்.

இன்றைய சைவசமயத்தைப் பாதிக்கும் சில பிரச்னைகள் பற்றி திரு. சிவசிதம்பரம் எடுத்துக்கூறிய கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகிறார் நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம்.

''இந்த 20-ம் நூற்றாண்டுக்கு ஏற்றவாறு, விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து பார்த்தாலும்சரி, தத்துவரீதியாக ஆராய்ந்து பார்த்தாலும் சரி, யார், எந்தக் கோணத்தில் நின்றும், எந்தப் பார்வையில் நோக்கினாலும், தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய சமயம்தான் நமது சைவசமயம் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

''நமது சைவசமய அனுட்டானங்களையும், விதிமுறைகளையும் சரிவரத் தெரிந்து கொள்ளாதவர்கள் - தெளிவாகப் புரிந்து கொள்ளாதவர்கள் வேண்டுமானால் சைவசமயத்தைப் பற்றிக் குறைகூறித் திரியலாம். ஆனால் சைவசமய அனுட்டானங்களுக்கும், விதிமுறைகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ள தத்துவங்களை-உண்மைகளை இவர்களுக்கு உணர்த்துவது சைவர்களாகிய நமது கடமையாகும்.

விவேகானந்தர் விளக்கிய முறை

''இந்தச்சந்தர்ப்பத்திலே, எனக்கு சுவாமி விவேகானந்தரின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்று நினைவுக்குவருகிறது. சுவாமி விவேகானந்தர் அமெரிக்கச் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டு, சைவ சமயத் தத்துவங்களை மேனாட்டார் மத்தியிலே பரப்பிப் பெரும் புகழ்பெற்றிருந்த வேளையிலே, ஒரு அமெரிக்கப் பெண்மணியின் அழைப்பை ஏற்று அவர் இல்லம் சென்றிருந்தார். சுவாமி விவேகானந்தரின் அறிவுத்திறனையும், சொற்பொழிவாற்றும் வல்லமையையும் வெகுவாகப் போற்றிப் புகழ்ந்த அவ் அமெரிக்கப் பெண்மணி, சுவாமி விவேகானந்தர் விளக்கிய சைவ சமயத்தத்துவங்களை ஆகவே பழைய காலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வந்த பழக்க வழக்கங்கள் என்ற பிடிவாதத்தில் இந்த இருபதாம் நூற்றாண்டுக்கும் விஞ்ஞான யுகத்துக்கும் ஒத்துவராத, ஒவ்வாத சடங்குகளையும் விதிமுறைகளையும் இன்னமும் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பது நமது சமய வளர்ச்சிக்கு நாம் போடும் பெரும் முட்டுக்கட்டையாகும்.

இளைஞர் சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது.

பழைய பழக்க வழக்கங்கள் என்று கூறிக்கொண்டு கலாத்துக்கொவ்வாத சமயச் சடங்குகளை இன்னமும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இன்றைய இளைஞர் சமுதாயம் இல்லை. பகுத்தறிவுள்ள இளைஞர்கள் எதையும் ஆராய்ச்சிக் கண்கொண்டு ஆராய்ந்து நோக்கும் இன்றைய இளைஞர்கள் - அறிவுள்ள இளைஞர்கள் நமது சமயத்தை வெறுத்தொதுக்குவதோடு காலப்போக்கில் நமது சைவ சமயத்தையே விட்டு வெளியேறி பிறசமயங்களில் சேருவதற்குக் காரணீயங்களாக இருக்கும் இந்த மூடப்பழக்கவழக்கங்களை நாம் முற்றாகக் களைந்தெறியவேண்டும்.

இடைக்காலத்தில் நமது சமயத்தில் புகுந்த இந்தக் குறைபாடுகளை நாம் களையாவிட்டால் நமது சைவ இளைஞர்கள் நமது சைவ சமயத்தைவிட்டு வெளியேறிவிடுவார்கள். நமது சமயம் அழிந்து போகும் நிலை நாளடைவில் உருவாகி விடும் இதை நாம் தடுக்க முடியாது.

திண்டாமை நமது சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றல்ல. நமது சமயத்தைச் சரிவர அறிந்து கலந்து கொள்ள கொழும்பிலிருந்தும் பல தூதுகோஷ்டிகள் செல்லவிருக்கின்றன என்று தெரிகிறது. இவர்களுக்கும் சைவசமயத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். தீண்டாமையை முன்வைத்து, சைவமக்களிடையே பிளவை உண்டு பண்ணி தங்களுடைய செல்வாக்கை அதிகரிக்கவும், அரசியல் லாபம் பெறவும் முயலும் இந்தக் கோஷ்டிகளின் முயற்சிகளையிட்டுத் தமிழ் மக்கள் கவனமாக இருத்தல் வேண்டும். இவர்களைப் போன்றோர் சைவசமயத்தை அளிக்கும் முயற்சிகளில் ஈடுபடாமல் தடுக்க வேண்டுமானால் தீண்டாமை என்னும் சாபத்தீட்டை நாம் ஒழிக்க வேண்டும்.

திரு. எம். சிவசிதம்பரம்

இன்றைய சைவஇளைஞர்களின் இந்தநிலைக்கு இன்னொரு முக்கியமான கருத்தையும் முன்வைக்க விரும்புகிறேன்.

நமது சைவசமயத்தைப் பின்பற்றுகின்ற மக்களிலேயே ஏராளமானோர், எண்ணிலடங்காதோர், வறுமையாலும், பிணியாலும் வாட்டிவதைக்கப்படுகின்றனர். நமது சகோதரர்களில் ஒரு சாரார் இப்படியாக வறுமையின் கோரப் பிடிக்குச் சிக்கித் தத்தளித்து பிணியால் வதைக்கப்பட்டு, வாடி வதங்குவதைக் கண்டும் காணாதவர்களாக நாம் இருப்பது முறையன்று.

சமூக சேவைகளிலே ஈடுபடுவோம்

நமது சைவசமயத்தைச் சார்ந்த பெரியார்களும் ஸ்தாபனங்களும் சமூகத்தின் அடித்தளத்தில் அவதியுறும் எண்ணற்றோரின் துன்பங்களையும், அவர்களது வறுமையையும், பிணியையும் மகத்தான கடமைகள் காத்திருக்கின்றன. அவற்றிற்கு உங்களைத் தயார் செய்து கொள்ளக்கூடிய இப்படியான முயற்சிகளில் ஈடுபடுவதுதான் நமது சமயத்தை நிலைநிறுத்தும் வழியாகும். ஆலயங்கள் கட்டுகிறோம். இதற்காக ஆலயங்கள் அவசியமில்லை என்று நான் சொல்வதாக எண்ண வேண்டாம். ஆனால் இறைவனின் பெயரினால் ஏராளமான பணத்தைச் செலவழித்துப் பல கோயில்கள் எழுப்புகின்றபெடுமக்கள் அந்தப் பணத்தில் ஒரு சிறு பகுதியையேனும் கோயிலிலே குடியிருக்கும் இறைவனின் குழந்தைகளின் வாட்டத்தைப் போக்க அவர்கள் நலிவு நீங்க நல்வாழ்வு வாழ வழி செய்யப் பயன்படுத்தலாகாதா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

எதிர்காலம் காத்திருக்கிறது

இன்றைய இளைஞர்களாகிய உங்களுக்கு - சைவ இளைஞர்களாகிய உங்களுக்கு எதிர்காலத்திலே

சைவம் தலை நிமிர்ந்து நிற்கும்

யும்மிகவும் பாராட்டிவிட்டு, ''எல்லாம் சரிதான், ஆனால் சைவர்களாகிய நீங்கள் கல்லையும், மண்ணையும் வணங்கொள்ளாதவர் தாம் சைவ சமய அடிப்படையில் ஒரு தீண்டாமை உள்ளது என்றுவிந்தையானவாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாறன் எழுதுவது

''பணம் தான் எனது துன்பத்துக்கெல்லாம் காரணம். இப்போது எனக்குப் பணம் தேவையே இல்லை. அதனால் மிக இன்பமாக இருக்கிறேன். என்னைப்போல் யார் இவ்வளவு இன்பமாக இருக்கமுடியும்?'' என்று ஓர் அன்பர் கூறியது. மிக வியப்பளித்தது.

ஏனென்றால் அவர் பல வருடங்களாக மது அரக்கன் பிடியில் சிக்கியிருந்தவர். அப்போது அவருடன் பேசவே யாருக்கும் மனம் இராது. குடித்துவிட்டு ஏதேதோ பேசுவார். குடிகாரரைச் சமூகத்தில் யார்தான் விரும்புவர்: அப்படி இருந்தவர் இப்போது எப்படிமனம்மாறினார்? மதுஅரக்கன் பிடியிலிருந்து எவ்விதம் விடுபட்டார்? இதைப்பற்றி அவரே கூறியதைக் கேளுங்கள்.

''நான் எவ்வளவோ சம்பாதித்தேன். சம்பாதித்த பணமெல்லாம் மதுபானத்தில் தான் அழிந்தது. வீட்டிலும் நிம்மதி கிடையாது. ஊரிலும் யாரும் மதிப்பதில்லை. அப்பழக்கத்தை விட்டு விடுமாறு அன்பு மனைவி, மக்கள் எல்லாரும் எவ்வளவோ கேட்டனர். எனக்கும்விட்டுவிட வேண்டுமென்றுதான் விருப்பம். ஆனாலும் விடமுடியவில்லை. மதுபானக்கடைக்கே என்னை மனம் இழுத்துக்கொண்டு போயிற்று. குடிகாரனை என்னைக்கட்டிக் கொண்டு, 9 பிள்ளைகளையும் பெற்று வளர்த்த என் மனைவியை எவ்வளவு போற்றினாலும் தகும்.

''பின் எப்படி இந்த துர்ப்பழக்கத்தைவிட முடிந்ததுதெரியுமா? வேலை போயிற்று கையில் பணமில்லை. கடன்கொடுப்பாடுமில்லை. இப்படி சங்கடப்படுகையில், ஒரு குருவானவர் இக்குடியைவிட்டுவிட ஒரு நல்ல வழியைக்கூறினார். என்ன தெரியுமா? நம்முயற்சியால் அந்த அரக்கனின் பிடியிலிருந்து விடுபடமுடியாதுதான். நமக்குள்ளிருக்கும் இறைவனிடம், குடிமுதலிய கூடாத பழக்கங்களை விடுவதற்கான மனத்திண்மைவேண்டுமென்று மன்றாடி மன்றாடிக் கேட்டதும் அவன் அருளாலே, அந்தப்பழக்கம் அடியோடு ஒழிந்தது. ''எனக்கு ஒரு கவலையுமில்லை. தனிமையில் இனிமை காண்கிறேன்'' என்றார்.

அவர் அப்படிக்கூறியதும், எனது காப்பிக்குடி பழக்கமும் நீங்கிய அனுபவம் நினைவுக்கு வந்தது. நமது இந்த ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு'' என்ற அமரகவி பாரதியாரின் வாக்குறுதி உண்மை உண்மை

0 0 0

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு தமிழ்ப் புலவர் கோவிந்தன் தலைவராக வந்த மறுநாளே ஒரு நல்ல மாறுதல் ஏற்பட்டுள்ளது. சட்டசபைக்குத் தலைவர் வருகையில், ''ஆனரபில் ஸ்பீக்கர்'' என்று சார்ஜண்ட் ஆங்கிலத்திலே கட்டியம் கூறுவதுதான் வழக்கம். ''இனிநாளை முதல் ''மாண்புமிகு பேரவைத்தலைவர்அவர்கள்'' என்று தமிழில் கட்டியம் கூறப்படாதா? நாளை முதல் புதிய தலைவர் அவ்விதமே கூறச்செய்வார் என்று நம்புகிறேன்' என்று ம. பொ. சி. அவர்கள் புதியதலைவரைப்பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார். அவ்விதமே மறுநாள் முதல் தமிழில் கட்டியம்கூற புதிய தலைவர் ஏற்பாடு செய்துள்ளார்.

தமிழ்ப்புலவர் ஒருவர் சட்டசபைத் தலைவரானதால், தமிழ்நாட்டிலே தமிழ்ப்புலவர்களின் மதிப்பு திடீரென உயர்ந்துள்ளது. அதுபோல் இலங்கையிலும் ஏற்படும் காலம் எப்போதோ!

0 0 0

தமிழிசை ஆசிரியர் சங்க ஆதரவில், காரை நகரிலே சென்ற இரண்டு நாட்களாக தியாகராஜ உற்சவ இசை விழா நடைபெற்றது. பிரவேசக் கட்டணம் வைத்தும், மண்டபம் நிறையகூட்டமாக இசையைக் கேட்க ரசிகர்கள் கூடியிருந்தனர். தியாகராஜ கீர்த்தனத்துடன், தமிழிசைப் பாடல்களைப் பாடியது குறிப்பிடத்தக்கது.

தலைமை வகித்த கல்லூரி அதிபர் தியாகராஜா அவர்கள் தியாகராஜ கீர்த்தனை பொருளுணர்ந்து பாடுவாராம். தமிழர் தெலுங்கையும் கற்கவேண்டுமென்கிறார் அவர். எல்லோரும் தெலுங்கு கற்க முடியாவிடினும் இசைவிழாக்களில் பாடும் தியாகராஜகீர்த்தனைகளின் கருத்தை முன்கூட்டியே ஒலிபெருக்கி மூலமோ அல்லது துண்டுப் பிரசுரவாயிலாகவோ விளக்கினால் தெலுங்கு தெரியாத மக்கள் அப்பாடல்களை பூரணமாக ரஸித்துப்பயன்பெற முடியும் பாடகர்களில் யாரும் இப்படிச்செய்ய துணிச்சலுடன் முன்வருவார்களா?

0 0 0

கும் விமானப்படை தடை போட்டிருக்கிறது.

ஒரு பக்கம் மொழி பேதம் காட்டி தமிழ் பேசும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படுகிறது; மறுபக்கம் அரசாங்க சேவையில் நீண்டகாலம் பணியாற்றியவர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லையெனக் காரணம் காட்டி வெளியேற்றப்படுகின்றனர். இரு தமிழர்களை அரசாங்க சேவையிலிருந்து வேலை நீக்கம் செய்ததை அரசாங்க சேவை ஆணைக்குழு தலையிட்டுத் தடுக்கத் தவறியதால் அரசாங்கஆணைக்குழுவின் தலைவர் மீதும் அங்கத்தவர்கள் மீதும் நம்பிக்கையில்லையென்றும் அந்த ஆணைக்குழுவைக் கலைத்து விடவேண்டுமென்றும் கவர்னர் ஜெனரலைக் கோரும் பிரேரணையொன்றை ஆட்சி மன்றத்தில் கொண்டு வருவதற்கு ஊர்காவற்றுறைப் பிரதிநிதி முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார் இந்தப் பிரேரணை நிறைவேறுமா, நிறைவேறாமா, அரசியல் இலாபத்துக்காக எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட இந்த மொழி விஷயத்தில் இனியும் கண்ணாமூச்சி விளையாடுவது நல்லதல்ல.

தமிழ்ப்பகுதிகளில் தனியார் நடத்தும் வகுப்புக்களிலும், ஓய்வு நேர வகுப்புக்களிலும் சிங்களம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. வசதிபடைத்தவர்களும் ஓரளவு வசதியுள்ளவர்களும் சிங்களம் படிக்கிறார்கள். அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் பலரும் சிங்களத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர். பாடசாலைகளில் சிங்களம் படிப்பிப்பதில்லை. தனிப்பட்ட வகுப்புகளில் சேர்ந்து படிக்கவசதியற்றபிள்ளைகளின் நிலை என்ன?

சிங்களம் படிப்பது சம்பந்தமாக தமிழ்த் தலைவர்கள் நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம். அரசியல் இலாபத்துக்காக எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட இந்த மொழி விஷயத்தில் இனியும் கண்ணாமூச்சி விளையாடுவது நல்லதல்ல.

சைவம் தலை நிமிர்ந்து நிற்கும்

பாண்டிச்சேரி தீர்ப்பு

இந்திய யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி சட்டமன்றத்துக்குநடந்த இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி அதிக ஸ்தானங்களைப் பெற்று ஆட்சி பீடத்தில் அமரும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல தமிழ் நாட்டை அடுத்த பகுதிகளிலும் தி. மு. கழகத்தின் செல்வாக்கு அதிகரித்து வருவதையும் அதன்மீது மக்கள் அதிக நம்பிக்கை வைத்துள்ளதையுமே பாண்டிச்சேரி தேர்தல் முடிவும் எடுத்துக்காட்டுகிறது.

முப்பது ஸ்தானங்களிலும் போட்டியிட்ட காங்கிரசுக்கு பத்து ஸ்தானங்களும், பத்தொன்பது ஸ்தானங்களுக்குப் போட்டியிட்ட தி. மு. கழகத்துக்கு பதினைந்து ஸ்தானங்களும் கிடைத்திருக்கின்றன. முன்னர் 22 ஸ்தானங்கள் காங்கிரசுக்கு இருந்தது.

சென்றபொதுத் தேர்தலிலும் பின்னர் இடைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் தோல்வியையே கண்டு வருகிறது. மத்திய அரசாங்கத்திடம் அதிகாரங்கள் குவிந்திருப்பதும் காங்கிரஸ் ஆட்சி பீடத்திலிருந்து மாநில அரசாங்கங்கள் எதற்கும் மத்திய அரசாங்கத்தையே எதிர்பார்த்திருந்ததும் மக்களின் விருப்பு வெறுப்புக்கேற்க மத்திய அரசாங்கத்தைத் தட்டிக் கேட்கத் தவறியதுமே காங்கிரஸ் மீது மக்கள் அதிருப்தி கொள்ளவும் அதன் செல்வாக்குக் குறையவும் காரணமாகும். காங்கிரசுக்குள் உள்ள பூசலும்இதற்கு ஒரு காரணமாகும். பொதுத் தேர்தல் முடிந்ததுமே காங்கிரஸ் தனது நிலையைப் பரிசீலனை செய்து தவறைத் திருத்தியிருக்கவேண்டும். திருத்தவே முடியாதென்றால் காந்திஜி கூறியதுபோல காங்கிரஸ் அரசியலை விட்டு சமூக சேவையில் ஈடுபடுவதே சிறந்தது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

யும்மிகவும் பாராட்டிவிட்டு, ''எல்லாம் சரிதான், ஆனால் சைவர்களாகிய நீங்கள் கல்லையும், மண்ணையும் வணங்குவதைத்தான் நாங்கள் விரும்பவில்லை'' என்று சுவாமிகளிடம் சொன்னாராம்.

''சுவாமி விவேகானந்தர் அவர்கள், இதற்கு நேரிடையாகப் பதிலேதும் சொல்லாமல், இவர்கள் வீற்றிருந்த மேசைமீதிருந்த ஒரு படத்தைச் சுட்டிக்காட்டி, ''இது யாருடைய படம்?'' என்று அப் பெண்மணியைக் கேட்க ''இது என் தந்தையாருடைய படம்'' என்று அவருக்குப் பதில் கிடைக்கவே அப்படத்தை எடுத்துக் கீழேபோட்டு காலால் மிதிக்குமாப்போலப் பாவனை செய்தா சுவாமிகள் இதைக் கண்ட அமெரிக்கப் பெண்மணி அலறிப் புடைத்து ''ஐயையோ, அது என் தந்தையின் படம்! அதை மிதிக்காதீர்கள்'' என்று அழாக்குறையாக சுவாமிகளிடம் கெஞ்சினாராம். சுவாமிகளேநகைத்துக்கொண்டே ''சாதாரணபடத்தை உங்கள் தந்தையின் படமாக நீங்கள் கருதுகின்றபடத்தை மிதிக்கப்போனால், ஏதோ உங்கள் தந்தையையே மிதித்து அவமானப்படுத்துவது போலப் பதறுகிறீர்களே! ஏன்?'' என்று கேட்டாராம்.

அப்பொழுதுதான் சைவ சமயத்தவர்களின் விக்ரக ஆராதனையின் பின்னால் மறைந்திருக்கிற மாபெரும் தத்துவத்தை அமெரிக்கப் பெண்மணி உணர்ந்து கொண்டாராம்!

இடைக்காலத்திலே புகுந்த கொள்கைகள்

இதைப்போல சைவசமய நடைமுறைப்பழக்க வழக்கங்களிலே வாழ்க்கையை வாழ்வாங்கு வாழவைப்பதற்கான பல தத்துவங்கள் மறைந்துகிடந்த போதிலும், நமது சமயத்திலே இடைக்காலத்திலே வந்து புகுந்த சில பழக்க வழக்கங்களால்-சடங்குகளால் - நடைமுறை நெறிகளால்-நமது சமயம் களங்கப்படுகின்ற நிலையேற்பட்டுள்ளது.

நமது சமயம், பழம் பெருமை வாய்ந்தது; பண்டையகாலத் தொன்மை உடையது, யாரும் மறுப்பதற்கில்லை. அதே நேரத்தில் புதியகாலமாற்றத்திற்கேற்ப இன்றைய சூழ்நிலைகளுக்கேற்ப புதிய முறைகளையும் வரவேற்கக் கூடியது நமது சமயம். இதையும் யாரும் மறந்துவிடமுடியாது

கொள்ளாதவர் தாம் சைவ சமய அடிப்படைகளில் ஒன்றாக தீண்டாமையும் இருந்தது என்றுவிந்தையானவாதம் புரிகிறார்கள். 'அன்பே சிவம்' என்று சொன்னவர்கள் அன்பையும் சிவத்தையும் ஒன்றாகக் கண்டவர்கள் அன்புதான் சிவம், சிவம் தான் அன்பு என்று இரண்டையும் வேறுபடுத்திக் காட்டாதவர்கள், தீண்டாமைக் கொள்கையையும் வகுத்தனர் என்றால் எப்படி எம்மால் ஏற்றுக் கொள்ள முடியும்.

'அன்பே சிவம்' என்று சொல்லி அன்பைக் கடவுளுக்குச் சமமாகக் காட்டியவர்கள், ஒரு மொழி பேசுகிறவர்களிடையே ஒரு இனத்தைச் சார்ந்தவர்களிடையே, ஒரே சமயத்தைப் பின்பற்றுகிறவர்களிடம் வித்தியாசம் பாராட்ட வேண்டும் என்று விதித்திருப்பார்கள் என்று நம்புவது விந்தையிலும் விந்தையே!

ஆறுமுகநாவலர் எதைச் சொன்னார்?

''ஆறுமுகநாவலர் கூட சாதி வித்தியாசம் இருப்பதை ஏற்றுக் கொண்டவர் என்றும் ஒரு சாரார் பிழையான கருத்தைப் பரப்பி வருகிறார்கள். ஆறுமுகநாவலரவர்கள் என்றைக்குமே சாதி வித்தியாசம் பாராட்டப்படுவதை ஆதரித்தது இல்லை. சைவசமய ஆசாரத்தில் குறைந்தவர்களை சைவ சமய ஆசாரங்களுக்கு அமைய ஒழுகாதவர்களைத் தான் அவர் கண்டித்து, ஒதுக்கினாரேயொழிய பிறப்பில் வித்தியாசம் பாராட்டப்படுவதை, ஒரு மொழி பேசி, ஒரே சமயத்தைப் பின்பற்றுகிற ஓர் இன மக்களிடையேபிறப்பால் ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்படுவதை ஆறுமுகநாவலரவர்கள் ஏற்றுக்கொண்டதில்லை.

''தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சாபக்கேட்டை, தீண்டாமையை நாம் முன்னின்றுழைத்து முறியடித்து, அழித்தொழிக்காவிட்டால் பிறசமயத்தவர்கள் எமது சமயத்தவர்களைப் பல காரணங்களைக் காட்டி ஏமாற்றி இழுத்துச் சென்றுவிடுவார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

அரசியல் லாபம் தேட முனைகிறார்கள்

''இம்மாதம் 18ம் திகதி யாழ்ப்பாணத்திலே நடக்க விருக்கின்ற ஒரு விழாவில்

தின் அடித்தளத்தில் அவதிப்படும் எண்ணற்றோரின் இடர் களைய, அவர்களது வறுமையையும், பிணியையும் ஒட்டி ஒழித்து, புது வாழ்வு அமைத்துக் கொடுக்க சமூக சேவைகளிலே பெருமளவு ஈடுபடாதிருப்

மகத்தான கடமைகள் காத்திருக்கின்றன. அவற்றிற்கு உங்களைத் தயார் செய்து கொள்ளக்கூடிய இப்படியான முயற்சிகளில் மேலும் மேலும் உற்சாகத்துடனும் உறுதியுடனும் ஈடுபட வேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

பசளைகளும் இயந்திரங்களும் விலைகுறைய வேண்டும்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான மிளகாய், உடுளைக்கிழங்குபோன்ற உப உணவுப்பொருட்களை இன்று நம் நாட்டிலேயே உற்பத்தியாக்கிக் கொள்வதுடன் சகாயமான விலையில் பொது மக்களுக்கு விநியோகிக்க முடிவதும் போற்றத்தக்க விஷயமாகும். அதேவேளையில் உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் தேவையைப் பூர்த்தியாக்க முயற்சியெடுக்கும் விவசாயிகள் கஷ்டமடைகிறார்கள் என்பதையும் கூறித்தானாகவேண்டும்.

விலைவாசிகள் குறைந்ததனால் விவசாயமக்களின் நன்முயற்சியும் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து கொண்டே வருகின்றது. இந்தவீழ்ச்சிஇறுதியில் நாட்டினுக்கே பேரிழப்பாக முடியும். சாதாரணமாக கால போகத்தில் உடுளைக்கிழங்கு உற்பத்திசெய்த விவசாயிகள் எத்தனையோ துன்பங்களை அனுபவித்து விளைவை எடுத்து எதிர்பார்த்த விலையிலும் மூன்றிலொரு பங்கு விலைக்கு விற்பதானால் அடுத்த போகத்தில் உருளைக்கிழங்குச் சாகுபடிக்கு எந்த விவசாயிதான் முன்வரக் கூடும்?

விவசாயிகள் எல்லாரிடமும் எல்லாவிதமான வசதிகளும் இருப்பதில்லை. உழவு யந்திரம் இல்லை — கூலிக்கே உழவேண்டும் நீர் இறைக்கும் யந்திரம் இல்லை. வாடகைக்கே இறைக்கவேண்டும். இத்தகைய நிலையைமாற்ற வேண்டியது தேசிய அரசின் கடமையாகும் மருந்துவகைகள் தெளிக்கும் ஸ்பிறேயரும், தண்ணீர் இறைக்கும் யந்திரம் போன்றவையும் குறைந்த விலையில் விவசாயி பெறக்கூடிய வசதிகளைச் செய்யவேண்டும்.

படித்த வாலிபர் திட்டம் போன்றவற்றினால் மிளகாய்ச்செய்கை நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஊக்கத்துடனும் திறமை

யுடனும் உழைத்த இளைஞர்கள் விலைவீழ்ச்சியைக்காணுகின்றபோது மனச்சோர்வடைகின்றனர். அத்துடன் பெரிய பொடுளாதாரக் கஷ்டங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் எமது அரசாங்காங்களை, மருந்துவகைகளையும், தேவையான இயந்திராதிகளையும், இறக்குமதி செய்து குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். விலை இறக்கத்தினால் மனச்சோர்வடையும் விவசாயி, அதிக உற்பத்தியையாவது செய்ய இந்த வகையிலான தேவைகள் அவசியம்.

இவைகளை நமது ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கூடிய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். காலம் கடந்து போனால் விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைவர்.

வே. சு. சண்முகராசா
படித்தவாலிபர் திட்டம்
விஸ்வமடு,

0 0 0

நாவலர் நூல்கள் தாரீர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, நாவலர் பெருமானின் பதிப்புக்களாயும் வெளிவந்த நூல்களின் முதற்பதிப்புக்களைக் கண்காட்சிக்கு வைத்து, இக் கண்காட்சியை நாவலர் சிலை நாட்டு விழாவின் போது நடாத்த முன் வந்துள்ளமையைச் சைவத் தமிழன்பர்கள் பத்திரிகைகள் வாயிலாய் அறிந்திடுக சலாம்.

'நாடா கொன்று காடா கொன்று
அவலா கொன்று மிசையா கொன்று
எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'

என்ற புறநானூற்றுப் அந்தப்பழக்கம் அடியோடு ஒழிந்தது. ''எனக்கு ஒரு கவலையுமில்லை. தனிமையில் இனிமை காண்கிறேன்'' என்றார்.

அவர் அப்படிக்கூறியதும், எனது காப்பிக்குடி பழக்கமும் நீங்கிய அனுபவம் நினைப்புவந்தது. நமது முயற்சியால் நம்மை நாம் திடுத்திக் கொள்ளுவதென்பது வெகுவாக முடியாது. நமது குறையே நமக்குத் தெரிவதில்லை. ஆகவே இறைவனிடம் மன்றாடிக் கேட்டால் அதற்கான மனவைராக்கியம் நமக்கு நிச்சயம் கிடைக்கிறது. புது மனிதராகிவிடலாம். ''ஐயமுண்டு பயமில்லை மனமே,

வாயிலாகவோ விளக்கினால் தெலுங்கு தெரியாத மக்கள் அப்பாடல்களை பூரணமாக ரஸித்துப்பயன்பெற முடியும் பாடகர்களில் யாரும் இப்படிச்செய்ய துணிச்சலுடன் முன்வருவார்களா?

0 0 0

பாடுவார் பசிதீர்ப்பாய்
பரவுவார்
பிணிகளைவாய்
ஓடுநன் கலகை உண்பலிக்
குழல்வானே
காடு நல்லிடமாகக்
கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே

— ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பாடலுக் கிணங்க எமது ஈழத்துச் சைவ நன்னிலத்தை உன்னத புண்ணிய பூமியாய் மாற்றச் சென்ற பெருமானின் நூல்களைக் கண்களாற் காணுகின்ற பேற்றினையாவது எமது பரம்பரையில் பெறல் வேண்டும் என்ற பேராவினால் நாவலர் சபையார் இதற்கென ஒரு புத்தகக் கண்காட்சிக் 'குழுவினை நியமித்துள்ளனர். இக்குழுவிலே சைவப்பற்றும், சமய அறிவும் தமிழன்பும் கொண்டபலர் உறுப்பினராய் அமைந்து புத்தகக் கண்காட்சிக்கான ஏற்பாடுகளைச் செய்வதிலே முழு மூச்சாய் ஈடுபட்டுவருகின்றனர்.

புத்தகக் கண்காட்சிக் குழுவின் அமைப்பாளர் என்ற முறையிலே எமது குழுவின் சார்பில் சைவ நன்மக்கள் பலரையும் புத்தகக் கண்காட்சி வெற்றி பெற உதவும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

நாவலர் பெருந்தகையின் முதற்பதிப்பு நூல்கள் கைவசம் வைத்திருப்போர் எம்முடன் தொடர்பு கொண்டு நூல்களை உதவுவார்களாயின் புத்தகக் கண்காட்சி முடிவுற்றதும் அவற்றைப் பத்திரமாகத் திருப்பித் தருவோம் என்பதை உறுதி செய்கிறேன்.

புத்தகக் கண்காட்சி, சிறப்புற அமைவதற்கான ஆலோசனைகள் மனப்பூர்வமாக வரவேற்கப்படும்.

க சொக்கலிங்கம்,
அமைப்பாளர்,
நாவலர் புத்தகக் கண்காட்சிக்குழு
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்,

ஆட்சிமன்ற சொல்லம்புகள்

ஆட்சிமன்றத்தில் கடந்தவார இறுதியில் அங்கத்தவர்கள் ஒருவரைப்பார்த்து ஒருவர் தூக்கி எறிந்த சொல்லம்புகளில் மேலும் சிலவற்றை இங்கு காண்க.

பெர்னாட் சொய்சா (கொழும்பு தெற்கு): ஆட்சிமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக உச்சஸ்தாயில் குரலெழுப்பும்ராஜாங்கஅமைச்சர்(திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா), எதிர்க்கட்சியிலிருக்கும் போது ஆட்சிமன்ற ஆயுட்காலம் ஐந்தாண்டுகள் இருந்தால் போதும் என்பார்: ஆனால் அவரே, ஆட்சிபீடமேறியதும், ஆட்சிமன்ற ஆயுட்காலத்தை ஏழுஆண்டுகள் அல்லது பத்தாண்டுகளுக்கு நீடிக்கவேண்டும் என்று கோருகிறார்.

பெர்னாட் சொய்சா (கொழும்பு தெற்கு): ''ஆட்சிமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் 'வீரர்' தான் (திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா) ஆட்சிமன்றத்தின் அதிகாரங்களைப் படிப்படியாகப் பறிப்பதற்கும் உடந்தையானவராக இருக்கிறார்!''

டாக்டர் என். எம்: ''சர்வாதிகாரி!''

பெர்னாட் சொய்சா: (சிரித்துக்கொண்டே) ''இல்லை; இல்லை; நான் இந்த மன்றத்தில் அவரின் நடவடிக்கைகளைப் பற்றித்தான் பேசுகிறேனேயொழிய வெளியே நடப்பவைகளைப்பற்றியல்ல!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org